விலை ரூபா: 8.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பத்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 23 வியாழக்கிழமை (08.09.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 263

ராம்கோ

ஆசியாக் கண்டத்தில் முதலாமிடத்தில் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

சீமெந்து

## உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியது கணிதப் பிரிவில் யாழ்.இந்து மாணவன் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று இணையத் தளம் மூலம் வெளியாகின.

யாழ்.மாவட்டத்தில் நேற்றுக் கிடைக்கப்பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் 10 பேர் 3 ஏ சித்தியும், யாழ்.இந்துக்கல்லூரியில் 8 பேர் 3 ஏ சித்தியும் , தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் 6 பேர் 3 ஏ சித்தியும் பெற்றுள்ளனர்.

யாழ்.இந்துக்கல்லூரி மாணவன் சி.மயூரன் கணிதப்பிரிவில் தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப்பெற்றுள்ளார். உயிரியல் பிரிவில் யாழ். இந்துக்கல்லூரி மாணவனான பொ.சிவபாலன் தேசியரீதியில் இரண்டாம் இடத்தையும் மாவட்ட ரீதியில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

இதைவிட யாழ்.இந்துக்கல்லூரி மாணவர்களான ந.பானுகோபன், ச.தனேசன் ஆகியோர் மாவட்ட மட்டத்தில் கணிதப்பிரி வில் முறையே 2ஆம், 3ஆம் இடங்களைப் பெற்றுள்ளனர்.

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மாணவி மயூரதி சரவணபவானந்தன் உயிரியல் பிரிவில் மாவட்ட மட்டத்தில் 3ஆம் நிலையைப் பெற்றுள்ளார்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் கலைப்பிரிவு மாணவன் செ.சிவசொரூபன் மாவட்ட மட்டத்தில் 2ஆம் (10 ஆம் பக்கம் பார்க்க)



பழுதடைந்த நிலையில் காணப்பட்ட யாழ்.பண்ணைப்பாலத்தை புனரமைப்பதற்கான ஆரம்பகட்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை படத்தில் காணலாம் (படம்: ஜங்கரன்)

# அரசு–புலிகள் நேரடிப்பேச்சு கட்டுநாயக்காவில் நடைபெறும்

## நோர்வே அரசு அறிவிப்பு

(நமது நிருபர்)

**அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுக்கள், கட்டுநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்துவதற்கு நோர்வே அரசு அறிவித்துள்ளது.**

**தமது முடிவு குறித்து அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளிற்கும் அறிவிக்க உள்ளதாக நோர்வே அரசினால் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.**

இலங்கையில் அண்மைக் காலமாக வன்முறைகள் அதிகரித்து வரும் நிலையில் அரசும் விடுதலைப் புலிகளும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை உறுதியாகச் செயற்படுத்துவதுதொடர்பாக பேச்சுக்களை நடாத்துவது குறித்து நோர்வே அரசுக்கு எழுத்து பூர்வமாக கடிதம் அனுப்பியிருந்தது. இலங்கையில்த்தான் பேச் சுக்களை நடாத்த வேண்டும் என்பதில் அரசு உறுதியாக இருந்தது. கிளிநொச்சியில் அல்லது இலங்கைக்கு வெளியே ஒரு நாட்டில் பேச்சுக்களை நடாத்தலாம் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்திருந்தனர்.

இதனடிப்படையில் பேச்சு வார்த்தை நடைபெறுவதற்கு சாத்தியமான இடமாக கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தையே (10 ஆம் பக்கம் பார்க்க)

## லொறி–சைக்கிள் விபத்து குடும்பஸ்தர் ஸ்தலத்தில் பலி

லொறி–துவிச்சக்கரண்டி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.இச்சம்பவம் நேற்று மாலை 4 மணிக்குயாழ்.ஸ்ரான்லி வீதியில் இடம் பெற்றது. துவிச்சக்கர வண்டியும் லொறியும் மோதியதில் துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்த பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பரமசோதிநாதன் சதீஸ்குமார் (வயது36) என்பவர் ஸ்தலத்தில் மரணமானார்.

சம்பவம் நடைபெற்ற சிறிது நேரத்தின் பின் சம்பவ இடத்திற்கு சென்ற யாழ். பொலிஸார் மரண விசாரணையின் பின்னர் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

(ச–19)

## இராணுவம் சுட்டதில் இளைஞன் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு இருதயபுரத்தில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது நேற்று மாலை 6.45 மணியவில் கிரனைற் வீச்சு நடத்தப்பட்டதையடுத்து இராணுவத்தினர் நடத்திய பதில் தாக்குதலில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மற்றுமொரு இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இளைஞர்கள் கிரனைற் வீசியதாகவும் படையினர் பதில்தாக்குதல் மேற்கொண்டபோது ஒருவர் கொல்லப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (10 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேத் தூதுக்குழுவினர் இன்று கிளிநொச்சி விஜயம்

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நோர்வே தூதுக்குழுவினர் இன்று கலந்து சிரயாடவுள்ளனர்.

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹன்ஸ் பிறட்ஸ்கர் மற்றும் கண்காணிப்புக் குழுத்தலைவர் ஹக்ருப் ஹொக்லண்ட் ஆகியோர் இன்று காலை 10மணிக்கு கிளிநொச்சியில் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேச்சுக்கள் நடாத்த வுள்ளனர் . கிளிநொச்சியில் உள்ள சமாதான செயலகத்தில் இப்பேச்சுக்கள் நடைபெறவுள்ளது. புலிகள் மீதான தாக்குதல்கள் ஆரம்பிக்கப் படக்கூடும் என எதிர்பார்க்கப்படும் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாகவும் ஜனாதிபதித் தேர்தல் நிலைமை தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது.

(ச–4)

## கிழக்கிலிருந்த அரசியல் பணிப்போராளிகள் அங்கிருந்து நேற்று முற்றாக வெளியேறினர்

### வடக்கிலிருந்தும் படிப்படியாக வெளியேறுகின்றனர்

(கிளிநொச்சி)

வடக்கு ,தென் தமிழீழத்தில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் பணிமேற்கொண்டுவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் போராளிகள் அங்கிருந்து வெளியேறி தமது நிர்வாகப் பகுதிகளுக்கு செல்கின்றனர்.

திருகோணமலை மற்றும் மட்டக்களப்புப் பகுதிகளில் உள்ள அரசியல் போராளிகள் அங்கிருந்து நேற்று முற்றாக வெளியேறியுள்ளனர்.

வட பகுதியிலிருக்கும் போராளிகள் படிப்படியாக வெளியேறி வருவதாக வன்னித்தகவல்கள் தெரிவித்தன. யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை ஏற்று இராணுவக்கட்டுப் பாட்டுப் பகுதிகளில் நிராயுத பாணிகளாக அரசியல் பணியில் ஈடுபட்டு வரும் போராளிகளைக் குறிவைத்து தொடர்ந்து தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இராணு (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR

your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021 - 222 3891, 222 6297, 0777-2349

011-2372952-3, 011-2360290, 011 - 2360291

e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ ஏயா

வானத்தில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை..

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யுத்த நிறுத்தத்தை நிரந்தர சமாதானமாக்க தொடர்ந்தும் பாடுபடுவேன் - ஜனாதிபதி



(கொழும்பு)

யுத்த நிறுத்தத்தினை நிரந்தர சமாதானமாக மாற்ற வேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நிரந்தர சமாதானத்திற்கு குறைந்தபட்சம் அதிகாரப் பகிர்வேனும் மேற்கொள்ளப்பட்ட வேண்டுமென்று அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 54ஆவது ஆண்டு நிறைவு வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

அடுத்துவரும் ஜனாதிபதித் தேர்தலை சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடாத்த நடவடிக்கை எடுக்கப்படும. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வாக்கு மோசடிகளில் ஈடுபடாத ஒரு கட்சி. சமாதான செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் நடவடிக்கைகளில் நான் ஈடுபடப்போகின்றேன். அதில் எவ்வித இடர்வந்தாலும் அதனை எதிர்கொள்ள நான் தயாராவுள்ளேன்.

தனிபபட்ட நபர்களுக்கன்றி மக்களுக்கே நான் சேவையாற்றினேன. அதனை அனைவரும் புரிந் துகொண்டிருப்பர். அந்த வகையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும். எமது கட்சி நாட்டுக்கு ஆற்றிய பணியினை நாம் விபரிக்கத்தேவையில்லை.

எனவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எமது கட்சியின் வேட்பாளருககே மக்கள் வாக்களிக்க வேண்டும்.

1994ஆம் ஆண்டில் பொதுஜன ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்த காலத்திலிருந்து அதன் பெருப்பாலான இலட்சியங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

நாட்டில் ஜனநாயகத்தைப் பலப்படுத்துதல், பயங்கரவாத நடவடிக்கைகளை ஒழித்தல், சமாதானத்திற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தல் என்பன இவற்றில் சிலவாகும்.

காலஞ்சென்ற பிரதம மந்திரி எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாராநாயக்க போன்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உன்னத தலைவர்கள் ஆற்றிய அர்ப்பணிப்பு நடவடிக்கைகள் காரணமாக இதனை நாங்கள் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது.

கட்சி அங்கத்தவர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டுள்ள போதிலும் கட்சியின் இலட்சியங்களை முன்னெடுத்துச் செல்ல முடிநதுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். (ந-4)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள நடைபெறவுள்ளது.

தினமும் 4.30 மணிக்கு ஸ்நபின அபிஷேகமும், 5.00 மணிக்கு மாலைப் பூஜையும் 5.15 மணிக்கு திருமுறைப் பாராயணமும், 6.00 மணிக்கு வசந்த மண்டப பூஜையும், 630 மணிக்கு சுவாமி உள்வீதி வலம் வருவதலும் இடம்பெறும். (ந-9)

## இரத்த தானம்

யாழ்.பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் இரத்ததான நிகழ்வு இடம்பெறும்.

யாழ்போதனா வைத்தியசாலை வைத்தியாகளினால் இரத்தம் சேகரிக்கப்படவுள்ளது (த)

## விக்கிரகத்தை உடைத்து இயந்திரத் தகடு திருட்டு

வட்டுக்கோட்டை கண்ணகி அம்மன் ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு மூலஸ்தான சிவலிங்க விக்கிரகம் உடைக்கபபட்டு விக்கிரகத்தின் கீழிருந்த இயந்திரத் தகடு மற்றும் மீனாட்சி அம்மன் இயந்திரத்தகடு என்பன எடுக்கப்பட்டுள்ளதுடன கோயிலில் இருந்த உண்டியலும் உடைத்து பணம் திருடப்பட்டுள்ளது. (ந-7)

# நிலையான மின்கட்டண அதிகரிப்பை நடைமுறைப்படுத்துவதில் தாமதம்

(கொழும்பு)

நேற்று முதல் மின்சாரத்திற்கு நிலையான கட்டண அதிகரிப்பு மேற்கொள்ள தீர்மானித்திருந்த போதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் ரஞ்சித் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மின்சாரத்திற்கான நிலையான கட்டணத்தை நேற்றைய தினம் 8 வீதத்தால் அதிகரிக்க திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும் தற்போதைய நிலையில் இந்தக் கட்டண அதிகரிப்பிற்கான தினம் குறித்து அறிவிகக முடியாதுள்ளது.

இதேவேளை, தற்போது நடைமுறையிலுள்ள மின்கட்டணத்தை குறைப்பதற்காக நுரைச்சோலை போன்ற மின் உற்பத்தி நிலையங்களை அமைத்தல் பொருத்தமான மாற்று வழியாகும்.

அந்த மின் திடடத்தை ஆரம்பிப்பதற்கான உடன்படிக்கையில் இலங்கையும் சீனாவும் கைச்சாத்திட்டுள்ளன.

தற்போது ஒரு மின் அலகுக்கான உற்பத்திச் செலவு 13 ரூபா 40 சதமாகும் எனக் குறிப்பிட்ட அவர், நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம் அமைககப்பட்டதும், 30 முதல் 35 வீதத்தால இச்செலவைக் குறைக்க முடியும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார். (ந-9)

## இந்தியா, நியூஸிலாந்து, சிம்பாவே

# முத்தரப்பு இறுதிப் போட்டியில் தோல்வியைத் தழுவியது இந்தியா

சிம்பாவேயில் நடைபெற்ற முத்தரப்பு கிரிக்கெற் போட்டியில் இறுதிப்போட்டி நேற்றுமுன்தினம் ஹராரே ஸ்ரேடியத்தில் நடைபெற்றது. இவவிறுதிப் போட்டியில் நியூஸிலாந்து அணியும் இந்திய அணியும் மோதின.



நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித்தலைவர் கங்குலி முதலில் துடுப்பெடுத்தாடத் தர்மானித்தார். ஆரம்ப துடுப்பாடட வீரர்களாக கங்குலியும் சேவாக்கும் களம் இறங்கினார்கள். ஓட்ட எண்ணிக்கை 72 ஆக இருந்தபோது கங்குலி ஆட்டமிழந்தார்.

பின்னர் முகமது கைவ் களமிறங்கி சேவாக்குடன் இணைந்து ஓட்ட எண்ணிக்கையை நல்லமுறையில் உயர்த்திச் சென்ற வேளை சேவாக் 75 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். அதன்பிறகு வந்த துணைத் தலைவா டிராவிட் ஓட்டம் எதுவும் பெறாமல் ஆட்ட




மிழந்தார். அடுத்து களமிறங்கிய யுவராஜ் 20 ஓடடங்களுடனும், வேணுகோபால் ராவ் 8 ஓட்டங்களுடனும், தோனி 11 ஓட்டங்களுடனும், அகாக்கர் 6 ஓட்டங்களுடனும், பதான் 10 ஓட்டங்களுடனும், நெக்ரா, ஜே.பி.யாதவ் ஆகிய இருவரும் ஓட்டம் எதனையும் பெறாமலும் ஆட்டமிழந்தார்கள். இறுதியில் இந்திய அணி 49.3 ஓவரில் 276 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெற்றுக்களையும் இழந்தது. முகமது கைவ் 93 ஓட்டங்களுடன் ஆட்டமிழக காமல் இருந்தார். இப்போட்டியில் சேவாக 65 பந்துகளில் 12 பவுண்ரிகள், ஒரு சிக்சர் அடங்கலாக 75 ஓட்டங்களை குவித்து தனது 18 ஆவது அரைச்சத்தைப் பூர்த்திசெய்தார்.

பதிலுக்கு 277 என்ற வெற்றி இலக்குடன துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்தின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான அணித்தலைவர் பிளமிங் ; ஆஸ்லே இணைந்து முதல் விக்கெற்றுக்கு 121 ஓட்டங்களை எடுத்த வேளை, பிளமிங் 61 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய நியூசிலாந்து வீரர்கள் வேகமாகவே ஓட்டங்களைக் குவித்தனர். ஸ்டைரிஸ 41 பந்துகளில் 37 ஓட்டங்களையும், மக்மிலன் 14 பந்துகளில் 13 ஓட்டங்களையும், வின்செண்ட் 35 பந்துகளில் 33 ஓட்டங்களையும் எடுத்தனர். மறுபக்கம் ஆஸலே நிதானமாக ஆடி 131





பந்துகளில் 115 ஓட்டங்களைப பெற்றார். இறுதியில் நியூஸிலாந்து 48.1 ஓவரில் 4 விக்கெற் இழப்பிற்கு 278 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றுள்ளது. பந்துவீச்சில் சேவாக் 44 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெற்றுக்களை கைப்பற்றினார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக சதமடித்த நியூஸிலாந்து வீரர் ஆஸ்லேயும், தொடர் ஆட்டநாயகனாக இந்த தொடரில் 11



விக்கெற்றுக்களைக் கைப்பற்றிய ஷேன் பாண்டும தெரிவு செயயப்பட்டனர்.

கடந்த 1999 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இந்திய அணி 20 இறுதிப் போட்டிகளில் விளையாடி ஒரு முறை மட்டுமே வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே இலங்கையில் நடந்த முத்தரப்பு போட்டியின் இறுதி ஆட்டத்தில் இலங்கையிடம் வெற்றியை பறிகொடுத்த இந்திய அணி தற்போது நியூஸிலாந்திடம் வெற்றியை இழந்துள்ளது. (அ-19)

# ஆஷஸ் தொடரின் இறுதியாட்டம் இன்று போராடும் நிலையில் அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 5 ஆவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிககெற் போட்டி இன்று இஙகிலாந்து ஓவல் மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுககிடையிலான புகழ்பெற்ற போட்டியான ஆஷஸ் கிரிக்கெற் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்றுவருகிறது. சாதாரணமாக ஆரம்பமான இத்தொடர் தற்போது பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது. இதன் நான்கு ஆட்டங்கள் நடந்து முடிந்துள்ளன. இதன் முதல் ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி 239 ஓட்ட வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இரண்டாவது ஆட்டத்தில் இரண்டு ஓட்டங்களால் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது.

மூன்றாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி சமனில் முடிவடைந்தது. நான்காவது ஆட்டத்தில் இங்கிலாந்து 3 விக்கெற் வித்தியாசத்தில் வெற்றி வாகை சூடியது.

இந்தத் தொடரில் தற்போது இங்கிலாந்து அணி 2-1 என்ற நிலையில் முன்னிலையில் உள்ளது. இந்நிலையில் இன்று ஆரம்பமாகும் ஐந்தாவது மற்றும் கடைசி டெஸ்ட பேட்டி மிகவும் பரபரப்பாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவுஸ்திரேலிய அணியைப் பொறுத்தவரையில அந்த அணி ஆடடம் கண்ட நிலையில உள்ளது. அவுஸ்திரேலியாவின் துடுப்பாட்ட வரிசை தள்ளாடியபடி உள்ளது. இதற்கு முக்கிய காரணம் அந்த அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் நிலைதது நின்று ஆடாதமையேயாகும். காயமடைந்துள்ள முன்னணி வேகப்பந்து வீச்சாளர் மெக்ராத் 5 ஆவது டெஸ்டில் ஆடவல்லை. எனவே அவருக்குப் பதிலாக வேகப்பந்து வீச்சாளர் ஸ்டுவர்ட் கிளாக் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து அணியைப் பொறுத்தவரையில் அந்த அணி வீரர்கள் படு மகிழ்ச்சியாக உள்ளனர். தொடரில் முன்னணியில இருப்பதால் அந்த அணியினர் எந்தவிதமான பதட்டமும் இன்றி கடைசி டெஸ்ட் போடடியில் முழுத் திறமையையும் வெளிப்படுத்தி வெற்றி பெற முயற்சி செய்வர்.

மாறாக அவுஸ்திரேலிய அணியினர் இநதப் போட்டியில் வெற்றியை தனதாக்கி 2-2 என்ற கணக்கில் தொடரை சமன் நிலையில் முடிக்க அவுஸ்திரேலிய வீரர்கள் கடுமையாகப் போராடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

மொத்தத்தில் இந்த ஆட்டம் பரபரப்பாகவும் விறுவிறுப்பாகவும் அமையும் என்பது உண்மை. (அ-19)

## விளையாட்டு செய்திகள்

# ‘சானியா மிர்ஸா’



யார் இந்த “சானியா மிர்ஸா?’’ ஆசிய நாடுகளில் குழந்தைகள் கூட சொல்வார்கள ரெனிஸ் விளையாட்டில் இன்ற ஆசியாவில் மட்டுமன்றி அகிலம் எங்கும் பேசப்படும் பெயர் தான் ‘சானியா மிர்ஸா’ என்று.

சர்வதேச அரங்கிலே வெற்றிகளைக் குவித்து வரும் முதல் இந்தியப் பெண் இவர். இவரைப்பற்றி நீங்கள் அறிந்ததும் அறியாததுமான தகவல்களைப் பார்ப்போம்.

15ஆம் திகதி நவம்பர் மாதம் 1986ஆம ஆண்டு மும்பையில் பிறந்த இவரின் தந்தை



‘இம்ரான் மிர்ஸா’ தாயார் நஸ்மா. இவரின் ஒரே ஒரு சகோதரி ஆனம்.

6 வயதிலேயே ரெனிஸ் விளையாட தொடஙகிய இவருக்கு பயிற்றுவிப்பாளர் கிருஷ்ணா பூபதி. பிடித்த ரெனிஸ் வீராங்கனை ‘ஸ்ரெபி கிராப்’. இதுவரை ரெனிஸ வளையாட 35இற்கு மேற்பட்ட நாடுகளுக்குச் சென்று வந்திருக்கின்றார்.

10ஆம் வகுப்பைப் ப,ர்த்தி செய்த இவருக்கு கல்வியைத் தொடர ரெனிஸ் தடை போடுகின்றது.



சானியாவிற்கு பிடித்த உணவு புரியாணி. அவருக்குப் பிடித்த நடிகர் அக்சய் குமார் மற்றும் நடிகை ரவீணா ரண்டன்.

விரும்பியணிவது சர்வார் மற்றும் ஜீன்ஸ். பிடித்த நிறங்கள் கறுப்பு, சிவப்பு மற்றும் நீலம. இவர் சாதிக்க விரும்புவது உலகின் ரெனிஸ் முன்னணி வீராங்கனைகள் பட்டியலில் முதல 50 பேருக் குள தொடர்ந்து 3-4 வருடங்கள் நிலைத்தி ருப்பது. யு.எஸ்.ஓபன் ரெனிஸ் போட்டி யில் நான்காம் சுற்று வரை முன்னேறி, 4ஆவது சுற்றுவரை முன் னேறிய முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றுள்ளமை சானியா வின் முன்னேற் றத்தை எடுத்துக்காட்டியுள்ளது.

இந்திய கிரிக்கெற் அணிக்கு உலகில் இருக்கும் இரசிகர் கூட்டங்களைப்போல் தற்போது ரெனிஸ் வீராங்கனை சானியா வறகும் உலகெங்கும் ரசிகர் கூட்டம் பெருககி கொண்டே செல்கிறது. 18 வயதிலே சானியா உலகின் ரெனிஸ் தரவரிசையில் முதல் 50 இடத்திற்கு முன்னேறியுள்ளார். எனின் இனிவரும் காலங்களில் சானியா தரப்பட்டியலில் முன்னேறுவதற்கு சந்தர்ப்பம் உண்டு. (19-யதார்த்திகன்)

# மஹிந்த-ஜே.வி.பி கூட்டு "கஞ்சிச்சட்டி" ஐ.தே.க பிரதிச் செயலர் கிண்டல்

ஜே.வி.பி.யுடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையானது 2004இல் ஜே.வி.பி.யுடன் ஏற்படுத்திக் கொண்ட சிக்கலை விட மிக மோசமான கஞ்சிச்சட்டியென ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் பிரதிச் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க பரிகசித்துள்ளார்.

பிரதமருக்கு ஆதரவளிக்க ஜே.வி.பி தீர்மானித்திருப்பது குறித்து கருத்து வெளியிட்ட போதே திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஒருபுறம் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுடன் நேரடியாக பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளத் தயாரென வெளிநாட்டு ஊடகங்களுக்குக் கூறும் பிரதமர் மறுபுறம் விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய அரசியல் அமைப்புகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவேன் என ஜே.வி.பியுடனான உடன்படிக்கையில கைச்சாத்திட்டு அதனை ஒரு கஞ்சிச் சட்டியாக்கியுள்ளார்.

ஜே.வி.பி பிரதமரை இணங்கச் செய்துள்ள உடன்படிககைகளைப பார்க்கையில் பொதுமக்கள் மத்தியில் யுத்தப் பீதி ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் இணைந்து போட்டியிட்ட கடந்த பொதுத் தேர்தலில் அவர்களினால் 44 சதவீதத்திற்கு மேல வாக்குகளைப் பெறமுடியாது போனது. தற்போது ஜே.வி.பி விதித்துள்ள நிபந்தனைகளால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நிர்க்கதி நிலைக்கு ஆளாகியுள்ளார்.

பிரதமர் இணங்கிய ஜே.வி.பியின் நிபந்தனைகளில் ஒன்றுகூட நாட்டின் எரியும் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடியதல்ல. எவ்வாறாயினும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் ஜே.வி.பியும் இணைந்து பணியாற்றுவதைக் காண ஐக்கிய தேசியக்கட்சி விரும்புவதாகவும் இரு தரப்பையும் ஒன்றாக தாக்க முடியும் எனவும் தெரிவித்தார். (இ-4)

## தெல்லிப்பழை துர்க்கை அம்மனுக்கு



## இன்று ஐந்தாம் திருவிழா

## அருள்தர வேண்டும் அம்மா

அருள் தர வேண்டுமம்மா/தாயே
அபயமுன் திருவடி மலரொளியே
திருவிழி மலர்திறந்து அருள்ஒளி நலங்கள் தரும்
பெருமாட்டி உந்தனருள் விழிகாட்டி எந்தனுக்கும்

தெல்லியுழு கொடையிளருள் சுரந்திடும் என்தாயே
நல்லவழி காட்டியெமை தானணைக்கும் உத்தமியே
அல்லல்கெ டுத்தருளும் அருள்விழி காட்டுமம்மா
வல்லமையின் சக்திவடி வாயொளிரும் துர்க்கையம்மா

அருளொளி காட்டியருள். சிந்திந லம்படைக்கும்
ஆதியெ னையாளும் அன்னையுன் மலரடிகள்
இருகர மும் வணங்க இன்னருள் மழைசொரியும்
ஈசனருள் நேசனிடப் பாகம மர்ந்தவளே

சு.குகதேவன்

# ஜனாதிபதி சந்திரிகாவுடன் சுகாதார அதிகாரிகள் பேச்சு

(கொழும்பு)

கொழும்புக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தென் கிழக்காசிய நாடுகளின் சுகாதார அமைச்சர்கள் உலக சுகாதார அமைப்பின் அதிகாரிகள் ஜனாதிபதி சநதிரிகா குமாரதுங்காவை நேற்று முன்தினம் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்கள்.

ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது சுனாமி அனர்த்தத்தின் பின்னர் இலங்கையின் சுகாதாரத்துறையினர் எடுத்த நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதிக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இலங்கைக்கு தொடர்ந்தும் சுனாமி பாதிப்பின் புனர்வாழ்வுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்காசிய வலயப் பணிப்பாளா கூறினார்.

சுனாமி போன்ற தேசிய அனர்த்தத்தை எதிர்கொள்வதற்கு தயாராகுதல்,அது தொடர்பான ஒத்துழைப்புக்களை நல்குதல் போன்றவற்றின் முக்கியத்துவம் குறித்தும் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளனர்.

அத்துடன் இந்த சந்திப்பின் போது உலக சுகாதார அமைப்பு, தென்கிழக்காசிய வலய சுகாதார அமைச்சர்கள் ஆகியோர் கலந்துகொள்ளும் மாநாடு தொடர்பாக ஜனாதிபதிக்கு விளக்கமளிக்கப்பட்டதாகவும் ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பில் நடைபெறவுள்ள தென்கிழக்காசிய நாடுகளின் வலய சுகாதார அமைச்சர்களின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காகவே அவர்கள் கொழும்பு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-8)

# இராசி பலன்

8.9.2005
(ஆவணி 23, வியாழக்கிழமை)
பஞ்சமி பின்னிரவு 4.02 மணிவரை
சுவாதி பின்னிரவு 12.24 மணிவரை
இராகுகாலம் 1.34 - 3.04 மணிவரை
சுபநேரம் 7.34 -9.04 மணிவரை
ரிசி பஞ்சமி, அமிர்தசித்தம்

| | |
|---|---|
| மேடம் | நண்பர்கள் சந்திப்பு, சென்ற இடத்தில் செல்வாக்கு, காரியஅனுகூலம், தொழில் நன்மை. |
| இடபம் | புதிய சிந்தை, காரிய நன்மை, சுவாரஸ்யம், சுப செய்தி. |
| மிதுனம் | புத்திரரால் கவலை, காரிய இடையூறு, பணக்குறைவு, கௌரவக்குறைவு. |
| கடகம் | கல்வியில் ஆர்வம், மனச்சஞ்சலம், மாதா சுகம், முயற்சி தாமதம். |
| சிங்கம் | கூட்டுமுயற்சி, போசன சுகம், மனமகிழ்ச்சி, உறவினர் சந்திப்பு. |
| கன்னி | உணர்ச்சி வசப்படுதல், தனவிரயம், சயன சுகக் குறைவு, முயற்சி தாமதம். |
| துலாம் | நல்ல மனைசெல்லல், புதிய முயற்சி, சயன சுகம், பெரியோர் சந்திப்பு. |
| விருச்சிகம் | காரிய அலைச்சல், சுபசெலவு, நிலைமாற்றம், அமைதிக்குறைவு. |
| தனுசு | சுபநகிழ்வு, புதிய பொருள் சேர்க்கை, காரிய அனுகூலம், பெருமையடைதல். |
| மகரம் | செயதொழில் விருத்தி, பிறருக்கு உதவுதல், முயற்சி கைகூடும், மேன்மை. |
| கும்பம் | புதியதிட்டமிடல், பிரயாணம், கட்டுப்பாடு, தந்தைவழி உறவு. |
| மீனம் | அபகீர்த்தி, எதிர்பாராத நன்மை, முயற்சி தடங்கல், பணவிரயம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

# கோழிவளர்ப்பில் ஈடுபடுவோர் உரிய சுகாதாரம் பேணவேண்டும்

(சுதுமலை)

கோழிவளர்ப்பில் ஈடுபடும் பண்ணையாளர்கள் உச்ச சுகாதார நிலையில் அவற்றைப் பராமரிப்பது முக்கியமானதொன்றாகும் எனத் தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவ பீடத்தலைவரும் விரிவுரையாளருமான டாக்டர் சுரேந்திரகுமார்.

நல்லூர்ப் பிரதேசசபைக்குட்பட்ட கொக்குவில், கோண்டாவில் பகுதிகளில் கோழிவளர்ப்பில் ஈடுபடும் பண்ணையாளர்களுக்கான விசேட கருத்தரங்கு ஒன்று கொக்குவில் உப அலுவலக நூலக மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் உரை நிகழ்த்திய வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்ததாவது:

"எமது பகுதிகளில் போசாக்கு நிலையை உயர்த்துவதற்கு முட்டை பிரதானமானதும் அவசியாமானதும் ஆகும். ஆனால் இப்பகுதிகளில் சனத்தொகை மிகவும் அதிகரித்துள்ளது. மிக நெருக்கமாக வீடுகள் அமைந்துள்ளது. எனவே மற்றையோருக்கு இடையூறு ஏற்படும் அளவுக்கு கோழிப்பண்ணைகள் அமையக்கூடாது. இவ்விடயத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு மிகவும் கடுமையான சட்டங்கள் உள்ளன.

மேலும் இப்பண்ணைகள் மக்கள் குடியிருப்புகளிற்கு அண்மையில் அமைந்தால் அதன் கழிவு எச்சங்களால் ஏற்படும் துர்நாற்றம் தொற்றுநோய்களை ஏற்படுத்தும். திறந்த கிணறுகளிற்குக்கூட காற்றால் அடித்துச்சென்று நீர் நிலைகள் மாசுபடும் சாத்தியம் இருக்கின்றன.

இதுவரை இப்பகுதிகளில் இரண்டு பண்ணைகள் மட்டுமே பதிவுசெய்யப்பட்டு உரிமம் பெற்றுள்ளது. ஆனால், அனுமதிபெறாது 72க்கும் அதிகமான பண்ணைகள் உள்ளமை ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன. எனவே ஒருமாத காலப்பகுதிக்குள் சகல பண்ணைகளும் பிரதேசசபையின் அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டு உரிய சுகாதார அனுமதியைப் பெற்ற பின்னரே இயங்கவேண்டும். இது தொடர்பான மேலதிக ஆலோசனைகளை சம்பந்தப்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களிடம் இருந்தும் மிருக கால்நடை வைத்திய அதிகாரியின் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் இனிவரும் காலங்களில் உரிய அனுமதியைப் பெறாது, சுகாதாரமற்ற முறையில் நடாத்தப்படும் பண்ணைகளிற்கு எதிராக உடனடி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்".

இக் கலந்துரையாடலில் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொறுப்பதிகாரி ரி.கிளிண்டஸ்,நல்லூர் பிரதேச செயலக சுற்றாடல் பாதுகாப்பு உத்தியோகத்தர்,இப்பகுதிகளின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் கால்நடை வைத்திய அதிகாரி மணிமனையினர் எனப் பலரும் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினார்கள். (த-252)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று நண்பகல் 12.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு தேர்த்திருவிழாவும், 17ஆம் திகதி சனி பிற்பகல் 2.00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

தினமும் பகல் திருவிழா முற்பகல் 10.00மணிக்கும், இரவுத் திருவிழா பிற்பகல் 5.00மணிக்கும் நடைபெறும். மாலை 6.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை இராமநாதன் கல்லூரி முன்னாள் அதிபர் திருமதி மங்கையர்க்கரசி சொற்பொழிவாற்றவுள்ளார். (த-9)

# கருத்துரை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சேது காண்பியப் பண்பாட்டிற்கான கற்கைப் புலம் ஏற்பாடு செய்துள்ள "சினிமாவும் தமிழ் பண்பாடும்" எனும் தலைப்பிலான பேராசிரியர் கா.சிவத்தம்பியின் கருத்துரை நிகழ்வு இன்று பி.ப.4.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும். (ற)



யாழ்.கரபந்தாட்டச் சங்கத்தினால், யாழ்.மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட கரபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டமும் பரிசளிப்பு வைபவமும் கடந்த மாதம் 21ஆம் திகதி சங்க ஆடுகளத்தில் நடைபெற்றபொழுது சங்கத்தின் தலைவர் கப்ரின் டி.ஏ.எம். குணசிங்கம் (ஜே.பி) மங்கள விளக்கேற்றி வைப்பதையும் அருகில் செயலாளர் கே.மனோகரன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்:- சுண்டுக்குளி நிருபர்)

## இன்று ஒரு தகவல்

# குழந்தையும் காதும்

“உங்கள் மகன் எப்படியிருக்கிறான் சார்?” என்று விசாரித்தார் ஒருவர். “அவன் என்ன சார் எதைச் சொன்னாலும் காதில் வாங்கமாட்டேன் என்கிறான்... அவன் பாட்டுக்குப் போகிறான்.வருகிறான்” என்று சொல்லி அலுத்துக் கொண்டார் அப்பா.

பெரியவர்கள் சொல்வதை சிறுபிள்ளைகள் கேட்பதில்லை என்பது ஒருகுறை. பெரியவர்கள் சொல்வது சிறுபிள்ளைகளின் காதில் விழுவதில்லை என்பது ஒரு குறை. இது கொஞ்சம் கவனமெடுக்க வேண்டிய விடயம். ஒரு குழந்தைக்கு காது சரியாகக் கேட்கிறதா இல்லையா என்பதை நாம் தான் கவனித்துப் பார்த்துக் கண்டுபிடிக்க வேண்டும். அதுவாக நம்மிடம் தவழ்ந்து வந்து “அப்பா எனக்குக் காது கேட்கவில்லை... அழைத்துக்கொண்டு டாக்டரிடம் போங்கள்” என்று கேட்டுக் கொண்டிருக்காது.

அதுசரி...ஒரு குழந்தைக்கு காது சரிவரக் கேட்கிறதா இல்லையா? என்பதை முன்கூட்டியே நாம் தெரிந்துகொள்வது எப்படி? அதற்குச் சிலவழிகள் உள்ளன. உங்கள் குழந்தையைக் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள். அடிக்கடி ஜலதோஷம், காதில் அரிப்பு எற்படுகிறதா? மூக்கு விரிவாகவும், டான்சில்,அடினய்ட் சதை அழற்சியும் இருக்கிறதா? வாயிலிருந்து எச்சில் ஒழுகுகிறதா? குழந்தை வாயினால் சுவாசிக்கிறதா? பற்கள் முன் தள்ளி வளர்கின்றனவா? இதெல்லாம் அதற்கு அறிகுறி.

அதன்பின், **V,B,D,F,Th** போன்ற ஒலிகள் சேர்ந்த வார்த்தைகளைக் குழந்தை சரியாகப் புரிந்துகொள்ளாது. உதாரணத்துக்கு **But** என்று சொல்லச் சொன்னால் பிள்ளை **Cut** என்று சொல்லும்.அதாவது **But** ஒலியை அதனால் புரிந்து கொள்ள முடியவில்லை. உங்கள் பிள்ளை உங்களை உரக்கப் பேசச் சொல்கிறானா? அடிக்கடி கேள்வி கேட்கிறானா? படிப்பில் போதுமான முன்னேற்றமில்லையா? பாடத்தைச் சரியாகக் கவனிக்கிறானில்லையா? இப்படியெல்லாம் இருந்தால் ஆரம்பத்திலேயே டாக்டரிடம் அழைத்துப் போய் சிகிச்சையளித்துக் குணமாக்கலாம்.

குழந்தைக்குக் காது சரியாகக் கேட்காவிட்டால் நீங்கள் செய்ய வேண்டியது என்ன தெரியுமா? அவனுக்குக் காது கேட்கவில்லை என்பதற்காக அவன் முன்னால் சத்தம் போட்டு பேசக்கூடாது. மெதுவாக சீராகப் பேசுங்கள். அவனைப் பார்த்துப் பேசுங்கள். உங்களது உதட்டு அசைவுகள் அவனுக்கு உதவும்.

நங்கள் வாயில் வெற்றிலை பாக்கு போட்டுக் கொண்டோ, புகைபிடித்துக் கொண்டோ பேசாதீர்கள். அப்படிப் பேசினால் அவனால் உங்கள் உச்சரிப்பை சரியாகப் புரிந்துகொள்ள முடியாது. ஒரு வார்த்தையைச் சொல்லும் போது அது அவனுக்குப் புரியாவிட்டால் அதே வார்த்தையை மறுபடியும் சொல்லுங்கள். அவனுக்கு நீங்கள் முதலில் சொன்ன வார்த்தை புரியவில்லை என்று நினைத்துக்கொண்டு மறுபடியும் திருப்பிச் சொல்லும் போது அதே அர்த்தம் வரக்கூடிய் வேறு வார்த்தையைச் சொல்லக்கூடாது. இப்படியெல்லாம் நடந்துகொண்டால் அவனுக்கு மனோதிடத்தை ஏற்படுத்த முடியும். இல்லாவிட்டால் தாழ்வுமனப்பான்மை வந்துவிடும்.

குழந்தைக்குக் காது கோளாறு என்றால் ஆரம்பத்திலேயே டாக்டரிடம் அழைத்துக்கொண்டு போனால் போதும்... குணப்படுத்திவிடலாம். பின்பு பார்த்துக்கொள்ளலாம் என்று அலட்சியமாக இருந்தால் தான் கஷ்டம். சிலா் கோபத்தில் சிறுபிள்ளைகளின் காதைப்பிடித்து திருகுவார்கள். அது மிகவும் தவறு. காது. கையோடு வந்துவிட்டால் என்ன செய்வீா்கள். ஒருகதை சொல்கிறேன் கேளுங்கள். கதைதான்!

ஒரு வீட்டில் அப்பா அம்மாவிடம் சொல்லிக்கொண்டிருந்தார் “இதேபார்... நாளைக்குக் காலையில் என்னை சீக்கிரம் எழுப்பிவிடு நான் செங்கல்பட்டு வரைக்கும் போய் விட்டுவர வேண்டியிருக்கிறது” என்றார். இதை அவரது மகன் காதில்வாங்கிக்கொண்டான். அப்பாவுக்கு சிரமம் வேண்டாம் என்று நினைத்து அவனே காலையில் யாருக்கும் தெரியாமல் எழுந்து புறப்பட்டு செங்கல்பட்டுக்குப் போய் விட்டான். மாலையில் திரும்பிவந்தான்.அப்பா மகனைக் காணாமல் அலைமோதிக் கொண்டிருந்தார். மாலையில் மகனைப் பார்த்ததும் “எங்கே போய் வருகிறாய்?” என்றார் கோபமாக. “செங்கல்பட்டுக்குப் போய்வந்தேன் அப்பா” என்றான் மகன். “எதற்குப் போனாய்?” என்று அதட்டினார். “நீங்கள் நேற்று அம்மாவிடம் சொல்லிக் கொண்டிருந்தீகள் அதைக் காதில் வாங்கினேன். உங்களுக்காக நான் போய் விட்டு வந்தேன்” என்றான்.

உடனே “எந்தக் காதில் வாங்கினாய்” என்று சொல்லி காதைப் பிடித்துத் திருகினார். அது கையோடுவந்துவிட்டது. இது நடந்துகொஞ்ச நாள் கழித்து அந்த அப்பாவும் மகனும் கடைத்தெருவில் நடந்துபோய்க்கொண்டிருந்தார்கள். எதிரில் ஒரு நாய் ஓடிவந்தது. அதற்கு இரண்டு காதும் இல்லை. “என்ன இது... இதற்கு இரண்டு காதும் இல்லை” என்றார் அப்பா. “அது இரண்டு தடவை செங்கல்பட்டுக்குப் போய் வந்திருக்கும்” என்றான் மகன்.


**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# வறிய மக்களின் சுபீட்சத்திற்காக எப்போதும் செயற்படுபவர் ரணில்

## ஐ.தே.க செயற்குழு உறுப்பினர் றோசி சேனநாயக்க

(தம்புள்ளை)

எதிர்க் கட்சித்தலைவா ரணில் விக்கிரமசிங்க எப பொழுதும் நாட்டின பொதுப் பிரச்சினைகள தொடாபாக அர்ப்பணிப்புடன் நடவடிககைகளை எடுத்து வந்தாா என்று ஐக்கிய தேசியக் கடசியின் செயற்குழு உறுபபினரான றோசி சேனநாயக்க தெரிவித்துள்ளார்.



தேர்தல்களை மட்டும் குறிக்கோள்களாக்கிக் கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் செயற்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தம்புள்ளையில் இடம்பெற்ற விசேட கூட்டமொன்றில உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். 2001ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க திறைசேரியினை அவதானித்துப் பார்த்தார். நாட்டின் பொருளாதாரம் வீழ்ந்து கிடப்பதைக் கண்ணுற்றார். அத்துடன், இனப்பிரசசினை நெருக்கடியில் நாடு பாரிய கடன் சுமைக்கு இலக்காகியிருந்தது. இது தொடாபாகத் தீர்வொன்றைப் பெற்றுக்கொடுக்க வேணடிய நோக்கில் அவர் நாட்டு மக்களுக்கு வாக்குறுதியொன்றை அளித்தார்.

“எனக்கு இரண்டு வருடங்கள் தாருங்கள். இந்த நாட்டினை படிப்படியாக முன்னேற்றுவதற்கு” என்றார் ரணில். மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கூட்டமைப்பு மேற்கொளளும் முறையிலோ அல்லது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற கொண்ட முறையிலோ அவா் தேர்தல் நடவடிக்கையாக இதனை மேற்கொள்ளவில்லை. அவர் எப்போதும் நாட்டின வறிய மக்களின் சுபீட்சத்திற்காகவே செயற்படுகிறாா் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஈ-4)

# ஐ.தே.கவை விட்டு சகோதரர் விலகியது தனக்கு நிம்மதி என்கிறார் எஸ்.பி

தனது சகோதரா் சாலிய திஸாநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகியமை தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் மிகுந்த மன நிம்மதியை அளிப்பதாக முன்னாள் அமைச்சா் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எஸ்.பி.திஸாநாயக்காவின் சகோதரரான மத்திய மாகாணசபை உறுப்பினா் சாலியத் திஸாநாயக்க எதிா வரும் ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கப் போவதாக தகவல்கள் வெளியானதையடுத்து சிறையிலிருந்து ஐ.தே.க.வுக்கு அவா் அனுப்பியிருக்கும் கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சாலிய திஸாநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகியமை தனக்கும் தனது குடும்பத்தவர்களுக்கும் பெரும் நிம்மதியென்றும் ஹங்குரன்கெத்த மக்களும் அதனால் பெரும் நிம்மதியடைவா என்றும் அவர் குறிப்பிட்டார்.

என்னை விடுதலை செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காததால் சாலிய ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு விலகுவதாகத் தெரிவித்தார். அது முழுப் பொய்யாகும். எனனை விடுதலை செய்வதற்கு முட்டுக்கட்டை போட்ட மத்திய மாகாணசபை உறுப்பினா் ஒருவர் உண்டெனில் அது சாலிய மட்டும்தான். அது மத்திய மாகாண மக்களுக்குத் தெரியாத இரகசியமல்ல.

என்னை விடுதலை செய்வதற்காக நடத்தப்பட்ட பாதயாத்திரையை நிறுத்த அவர் எடுக்காத நடவடிக்கைகளில்லை. அது என்னை விடுவிக்க அவா் விரும்பாததால் செய்த காரியமாக எண்ணாது அவருக்கு ஆற்றும் நியாயமாகக் கூறவேண்டும். அவரது உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளதால் ஒரு மைல் தூரம் கூட அவரால் நடந்துசெல்ல முடியாது. பாதயாததிரையின் இரண்டாம் நாளன்று மாவனல்லையில் அவர் நடந்து கொண்ட ஒழுங்கீனத்தினால் அதன் பின்னர் இடம் பெற்ற எந்தவொரு அரசியல் செயற்பாட்டிற்கும் எனது குடும்பத்தினா் அவருக்கு அழைப்பு விடுக்கவில்லை.

எமது ஹங்குரன்கெத்த கிளை மறுசீரமைப்பு நடவடிக்கைகளிலும் என்னை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளிலும் நாம் அவரை ஒதுக்கியே வைத்திருந்தோம்.

இது எனது தனிப்பட்ட தீாமானமல்ல. எனது தாயாரினதும் குடும்பத்தின் ஏனைய ஆறு சகோதர, சகோதரிகளினதும் வேண்டுகோளுக்கமையவே இந்தத் தீாமானம் எடுக்கப்பட்டது. இந்தத் தீர்மானத்திற்கு ஹங்குரன் கெத்த ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக் குழுவும் ஏகமனதாக இணங்கியுள்ளது.

இதில் உண்மைநிலை என்னவெனில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அவா் விலகவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி அவரை விலக்கியதென்பதே சரி. இது நிகழ்ந்து 6 மாதங்களுக்கு மேலாகின்றன. அவர் எமது அரசியல் நடவடிக்கைகளுக்கு பெரும் தடையாக இருந்ததுடன் பெரும் தலையிடியாகவும் இருந்தார் என்றும் முன்னாள் அமைச்சா் எஸ்.பி.திஸாநாயக்க அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார். (ஈ-4)

# மஹிந்தவின் நடவடிக்கைகளால் அதிருப்தி; ஐ.தே.கவுக்கு தாவும் சிரேஷ்ட உறுப்பினர்கள்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பல்வேறு சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாறுவதாக உள்ளாா்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினா் மனோவிஜேரத்ன தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ பல முக்கிய விடயங்களில தீாவு எதனையும் தெரிவிக்கவில்லை எனக் கூறி தாம் ஐககிய தேசியக் கட்சிக்கு ஆதரவு அளிக்க அவா்கள விரும்புகின்றனா் என எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் தெரிவித்தார்.

நாட்டின் முக்கிய பிரச்சினைக்கான தீர்வில் மஹிந்த ராஜபக்ஷ தெளிவான பார்வையை கொண்டிருக்கவில்லை. இதனையே இடதுசாரி முன்னணி தலைவர் வாசுதேவ நாணயக்காரவுடனான சந்திப்பின் போதும் உணரமுடிந்தது. காலையில் பிரதமா் வாசுதேவவுடன் பேசிய போது அவருடன் உடன்பட்டும் மாலை ஹெல உறுமயவுடன் உடன்பட்டும் இரவில் ஜே.வி.பியின் கோரிக்கைகளுக்கு உடன்பட்டும் உள்ளாா்.

எனவே அவர் தனது சொந்தக் கொள்கை எதுவும் வைத்திருப்பதாகத் தெரியவில்லை என விஜேரத்ன கூறினாா். மேலும் தற்போது அரசாங்கம் வலுக்கட்டாயமாக பொதுமக்களை பொதுக்கூட்டங்களுக்கு வரவழைத்து வலுக்கட்டாயமாக அங்கு சமுகமளித்தவா்களுக்கு சுனாமி நிவாரணத்தை வழங்குகிறது.

கேகாலையில் கூட்டத்திற்கு வருகை தந்தவா்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான அன்பளிபபுகள் வழங்கப்பட்டுள்ளன. புடவைகளும் அனுப்பப்பட்டுள்ளன.

பௌத்த குருமார்கள் சிலருக்கு பெண்களின் உள்ளாடைகள் அடங்கிய பாா்சல்களும் பெண்களுக்கான, ஆண்களுக்கான ஆடைகள் அடங்கிய பாா்சல்களும் வழங்கப்பட்டிருக்கின்றன எனவும் குற்றஞ்சாட்டிய விஜேரத்ன அரசாங்கம் நாட்டின் சொத்துகளை, நிதிகளை எல்லாம் ராஜபக்ஷவின் பிரசாரத்திற்கே பயன்படுத்துகிறது என்றும் கூறினாா். (ஈ-6)







**நீர்வேலி ஸ்ரீகணேசா முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழாவில் மாணவர்கள் பாண்ட் வாத்தியத்துடன் விருந்தினர்களை மேடைக்கு அழைத்துச் செல்கின்றனர். நீர்வை இரதி, நீர்வைமணி ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைப்பதையும், சுன்னாகம் தேசிய சேமிப்புவங்கி முகாமையாளர் வீ.அருளானந்தம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றுவதையும், மேடையில் பிரமுகர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.**

# தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளல்-2005

**வடமராட்சிஉதவி அரச அதிபர் பிரிவு**
**வடமராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மூப்பின் அடிப்படையில் தெரிவானோரின் பெயர் விபரம் வருமாறு:-**

1.யா/வ.கி/17 திரு.மிக்கேல்பிள்ளை செபரத்தினம்
2.யா/வ.கி/34 திரு.வேலுப்பிள்ளை நடராசா
3.யா/வ.கி/39 திரு.மயிலு தியாகராசா
4.யா/வ.கி/53 திரு.மாணிக்கம் சுந்தரம்பிள்ளை
5.யா/வ.கி/72 திரு.கந்தையா இராசையா
6.யா/வ.கி/80 திரு.வேலுப்பிள்ளை ஐயாத்தம்பி
7.யா/வ.கி/84 திரு.நீக்கிலாப்பிள்ளை யோசேப்மரியாம் பிள்ளை
8.யா/வ.கி/88 திரு.குமாரு ஆறுமுகம்
9.யா/வ.கி/92 திரு.பொன்னையா பாலசிங்கம்
10.யா/வ.கி/100 திரு.வல்லிபுரம் சாமித்தம்பி
11.யா/வ.கி/126 திரு.கதிர்காமு நடேசு
12.யா/வ.கி/132 திருமதி.லூசியாறோஸ் அல்பேட்ஜெறோம்
13.யா/வ.கி/135 திரு.வேலுப்பிள்ளை சரவணமுத்து
14.யா/வ.கி/136 திரு.சின்னத்தம்பி இராமலிங்கம்
15.யா/வ.கி/148 திரு.வினாசித்தம்பி பாலசுந்தரம்
16.யா/வ.கி/152 திரு.இசிதோர் டேவிற்மரியசெல்வம்
17.யா/வ.கி/173 திரு.அந்திரோஸ் ஆரோக்கியநாதர்
18.யா/வ.கி/192 திருமதி.இரத்தினம் கிருஷ்ணபிள்ளை
19.யா/வ.கி/195 திரு.சடையர் சுப்பிரமணியம்
20.யா/வ.கி/197 திரு.மூத்ததம்பி கந்தப்பு
21.யா/வ.கி/208 திரு.தம்பிஐயா தில்லையம்பலம்
22.யா/வ.கி/235 திருமதி.இலட்சுமிப்பிள்ளை இராசையா
23.யா/வ.கி/244 செல்வி.சிவக்கொழுந்து கணபதிப்பிள்ளை
24.யா/வ.கி/257 திரு.முருகேசு இராசையா
25.யா/வ.கி/264 திரு.வேலுப்பிள்ளை ஆறுமுகம்
26.யா/வ.கி/270 திரு.வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்
27.யா/வ.கி/283 திரு.இயக்கோ கபிரியேல்பிள்ளை
28.யா/வ.கி/287 திருமதி.லூர்த்தம்மா இன்னாசிமுத்து
29.யா/வ.கி/311 திரு.மிக்கல் லேஞ்சூஸ்
30.யா/வ.கி/317 திரு.மிக்கேல் லேஞ்சூஸ்
31.யா/வ.கி/405 திரு.செல்லையா கிட்ணபிள்ளை
32.யா/வ.கி/414 திரு.வையிரவிப்பிள்ளை நாகதம்பி
33.யா/வ.கி/425 திரு.பேதுரு சிங்கராசா
34.யா/வ.கி/431 திரு.ஆசையர் கோவிந்தம்
35.யா/வ.கி/449 திரு.சுப்பையா நாகமுத்து
36.யா/வ.கி/459 திருமதி.சின்னமணி ஏரம்பு
37.யா/வ.கி/477 திருமதி.நவபாக்கியம் அப்பாத்துரை
38.யா/வ.கி/491 திரு.கந்தையா சின்னத்தம்பி
39.யா/வ.கி/501 திருமதி.பிரகாசியம்மா யோசேப்பு
40.யா/வ.கி/515 திரு.வயித்தி சந்தணப்பிள்ளை
41.யா/வ.கி/535 திரு.செல்லையா ஐயாத்துரை
42.யா/வ.கி/541 திரு.வல்லிபுரம் நாகதம்பி
43.யா/வ.கி/558 திரு.மத்தேஸ் ஜேமீஸ்
44.யா/வ.கி/578 திரு.கோவிந்தர் ஆறுமுகம்
45.யா/வ.கி/584 திரு.கணபதி கிட்டினன்
46.யா/வ.கி/589 திரு.சூசைப்பிள்ளை பேதுறுப்பிள்ளை
47.யா/வ.கி/590 திருமதி.லூர்த்தம்மா அமிர்தநாயகம்
48.யா/வ.கி/591 திரு.வலத்தி செலஸ்தீன்
49.யா/வ.கி/619 திரு.முத்தையா கணபதிப்பிள்ளை
50.யா/வ.கி/644 திருமதி.பொற்கொடி கணபதிப்பிள்ளை
51.யா/வ.கி/672 திரு.சின்னையா நல்லதம்பி
52.யா/வ.கி/682 திரு.வேலுப்பிள்ளை நல்லதம்பி
53.யா/வ.கி/698 திருமதி.வள்ளியம்மை இராசலிங்கம்
54.யா/வ.கி/718 திரு.கணபதிப்பிள்ளை சிற்றம்பலம்
55.யா/வ.கி/723 திரு.கந்தன் வேலுப்பிள்ளை
56.யா/வ.கி/732 திரு.வைரவப்பிள்ளை சண்முகநாதன்
57.யா/வ.கி/735 திரு.ஆழ்வாப்பிள்ளை சங்கரப்பிள்ளை
58.யா/வ.கி/739 திரு.மனுவேல் இராசையா
59.யா/வ.கி/741 திருமதி.கந்தையா தங்கம்மா
60.யா/வ.கி/755 திரு.கலித்துசூசைஅந்தோனி செபமாலை
61.யா/வ.கி/759 திருமதி.செல்லம்மா கணபதிப்பிள்ளை
62.யா/வ.கி/773 திரு.சின்னையா தம்பிஐயா
63.யா/வ.கி/795 திரு.சின்னத்தம்பி முருகேசு
64.யா/வ.கி/796 திரு.லிகோரி எட்மன்ரெஜி
65.யா/வ.கி/803 திரு.ஆறுமுகம் பொன்னம்பலம்
66.யா/வ.கி/817 திரு.முருகேசு கணபதிப்பிள்ளை
67.யா/வ.கி/849 திருமதி.மேரிவுளோரெற் ஆரோக்கியநாதன்
68.யா/வ.கி/855 திரு.வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை
69.யா/வ.கி/885 திரு.முருகுப்பிள்ளை அரியரத்தினம்
70.யா/வ.கி/888 திருமதி.மாகிறேற் அல்பிறட்
71.யா/வ.கி/906 திரு.கணபதிப்பிள்ளை இராசையா
72.யா/வ.கி/912 திரு.அந்தோனிப்பிள்ளை பிலிப்பையா
73.யா/வ.கி/918 திரு.அம்பலவாணர் ஐயம்பிள்ளை
74.யா/வ.கி/936 திரு.பிலிப்பு வரப்பிரகாசம்
75.யா/வ.கி/945 திரு.மூத்ததம்பி சீவரெத்தினம்
76.யா/வ.கி/947 திரு.வயிரமுத்து சுப்பிரமணியம்
77.யா/வ.கி/1003 திரு.நாகப்பர் தம்பித்துரை
78.யா/வ.கி/1004 திரு.சின்னத்துரை செல்லையா
79.யா/வ.கி/1013 திரு.இராயப்பு இராசேந்திரம்
80.யா/வ.கி/1029 திருமதி.மாணிக்கம் அப்பாப்பிள்ளை
81.யா/வ.கி/1048 திரு.ஐயம்பிள்ளை பஞ்சாட்சரம்
82.யா/வ.கி/1076 திரு.சபாபதிப்பிள்ளை வேலாயுதம் பிள்ளை
83.யா/வ.கி/1086 திரு.சின்னம்மா கணபதிப்பிள்ளை
84.யா/வ.கி/1101 திருமதி.பொன்னம்மா முத்தையா
85.யா/வ.கி/1111 திரு.மயிலு வயிரமுத்து
86.யா/வ.கி/1114 திருமதி.செல்லம்மா வேலுப்பிள்ளை
87.யா/வ.கி/1140 திருமதி.றோஸ்மலர் ஞானப்பிரகாசம்
88.யா/வ.கி/1144 திரு.சின்னப்பு கதிரவேலு
89.யா/வ.கி/1162 திரு.சின்னத்துரை நடராசா
90.யா/வ.கி/1170 திருமதி.விக்டோரியா செபமாலை
91.யா/வ.கி/1186 திருமதி.தங்கமுத்து சின்னையா
92.யா/வ.கி/1199 திரு.பிலிப்பு வென்சிலாஸ்
93.யா/வ.கி/1221 திரு.நமசிவாயம் செல்வமாணிக்கம்
94.யா/வ.கி/1245 திரு.இராயப்பு மலக்கியாஸ்
95.யா/வ.கி/1247 திரு.கணவதிப்பிள்ளை மார்க்கண்டு
96.யா/வ.கி/1253 திரு.நல்லதம்பி வேலுப்பிள்ளை
97.யா/வ.கி/1268 திருமதி.பாக்கியம் பூபாலசிங்கம்
98.யா/வ.கி/1279 திரு. அருளப்பு அந்தோனிப்பிள்ளை
99.யா/வ.கி/1292 திரு. மத்தியாஸ் யோசேப்பு
100.யா/வ.கி/1319 திரு. வினாசித்தம்பி சங்கரப்பிள்ளை
101.யா/வ.கி/1330 திருமதி. இராசம்மா முருகேசு
102.யா/வ.கி/1364 திருமதி.விமலானந்தராணி சிவபால சிங்கம்
103.யா/வ.கி/1389 திரு.சின்னையா முருகேசு
104.யா/வ.கி/1391 திரு.வேலுப்பிள்ளை முத்தையா
105.யா/வ.கி/1409 திரு.வீரகத்தி பொன்னையா

**வடமராட்சி உதவி அரச அதிபர் பிரிவு**
**வடமராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் குலுக்கல் அடிப்படையில் தெரிவானோரின் பெயர் விபரம் வருமாறு:-**

1.யா/வ.கி/57 திருமதி.யோகக்கிளி வரதராசா
2.யா/வ.கி/61 திரு.கிருஷ்ணபிள்ளை ஆறுமுகம்
3.யா/வ.கி/118 திரு.கந்தையா கந்தசாமி
4.யா/வ.கி/251 திரு.மரியாம்பிள்ளை யோசேப்பு
5.யா/வ.கி/263 திரு.மோசேஸ் சூசைப்பிள்ளை
6.யா/வ.கி/305 திருமதி.ரஜனி ஜெயரட்ணம்
7.யா/வ.கி/325 திரு.வேலுப்பிள்ளை ஐயாத்துரை
8.யா/வ.கி/410 திரு.வினாசித்தம்பி சின்னையா
9.யா/வ.கி/547 திரு.முருகேசு கந்தசாமி
10.யா/வ.கி/676 திரு.கதிரேசு சிவபாலசிங்கம்
11.யா/வ.கி/797 திரு.வேலன் பரஞ்சோதி
12.யா/வ.கி/846 திரு.கலித்துசூசை அந்தோனிசெபமாலை
13.யா/வ.கி/1055 திருமதி.புஸ்பராணி தனபாலசிங்கம்
14.யா/வ.கி/1222 திருமதி.பிறேமலதா கமலேஸ்வரன்
15.யா/வ.கி/1267 திருமதி.தங்கரத்தினம் குமாரசாமி

**வேலணை உதவி அரச அதிபர் பிரிவு**
**வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மூப்பின் அடிப்படையில் தெரிவானோரின் பெயர் விபரம் வருமாறு:-**

1.யா/வே/1 திரு.வேலுப்பிள்ளை கந்தையா ஏரம்பு
2.யா/வே/8 திரு.வேலுப்பிள்ளை செல்லத்துரை
3.யா/வே/14 திரு.கதிர்காமர் செல்லத்துரை
4.யா/வே/18 திருமதி.தனலெட்சுமி நாகராசா
5.யா/வே/30 திரு.பசுபதிப்பிள்ளை மார்க்கண்டு
6.யா/வே/43 திரு.சரவணமுத்து கனகரெத்தினம்
7.யா/வே/55 திருமதி.கனகம்மா செல்லத்துரை
8.யா/வே/72 திருமதி.நாகரத்தினம் திருநாவுக்கரசு
9.யா/வே/79 திரு.மரியாம்பிள்ளை அன்ரனிப்பிள்ளை
10.யா/வே/98 திரு.நாகலிங்கம் கந்தையா
11.யா/வே/105 திரு.கனகசபை சபாரெத்தினம்
12.யா/வே/111 திரு.பொன்னப்பா பரராசசிங்கம்
13.யா/வே/128 திருமதி.செல்லம்மா சின்னத்துரை
14.யா/வே/129 திருமதி.பாக்கியலட்சுமி விசுவலிங்கம்
15.யா/வே/132 திருமதி.சின்னம்மா நடராசா
16.யா/வே/133 திருமதி.கனகம்மா குமாரசாமி
17.யா/வே/140 திரு.இராமநாதன் மாரிமுத்து
18.யா/வே/157 திருமதி.முத்துலட்சுமிஅம்மாள் சண்முகரெத்தினம்
19.யா/வே/159 திரு.மயில்வாகனம் இரத்தினசபாபதி
20.யா/வே/160 திரு.துரையப்பா இராமசாமி
21.யா/வே/161 திரு.கந்தையா தியாகராஜா
22.யா/வே/166 திருமதி.இராசலட்சுமி அருட்சிவம்
23.யா/வே/171 திரு.இராமலிங்கம்திசைவீரசிங்கம் ஏகாம்பரநாதன்
24.யா/வே/198 திரு.சின்னத்தம்பி நாகராசா
25.யா/வே/201 திரு.நடராசா தருமலிங்கம்
26.யா/வே/208 திருமதி.செல்வதி தம்பிஐயா
27.யா/வே/239 திருமதி.பிலோமினாபூமணி பிரான்சிஸ்
28.யா/வே/240 திரு.பெனடிக்ற் யோசேப்இராசேந்திரம்
29.யா/வே/243 திருமதி.பார்வதி சிவசம்பு
30.யா/வே/244 திரு.வயிரமுத்து இரத்தினசபாபதி
31.யா/வே/251 திரு.மாரிமுத்தாபிள்ளை கணேசபிள்ளை
32.யா/வே/261 திரு.இராயப்பு திருச்செல்வராஜர்
33.யா/வே/262 திரு.கனகரட்ணம் செல்வராசா
34.யா/வே/266 திரு.வல்லிபுரம் சிவப்பிரகாசம்
35.யா/வே/274 திரு.கந்தையா கனகரத்தினம்
36.யா/வே/278 திரு.சின்னையா இரத்தினம்
37.யா/வே/294 திரு.தம்பிப்பிள்ளை சிவசுப்பிரமணியம்
38.யா/வே/302 திருமதி.அன்னலட்சுமி செல்வராஜா
39.யா/வே/303 திருமதி.ஜஸ்வரி தம்பிஐயா
40.யா/வே/306 திரு.சூசைப்பிள்ளை ஜோன்பிள்ளை
41.யா/வே/324 திரு.சபாபதிப்பிள்ளை சொர்ணலிங்கம்
42.யா/வே/329 திரு.நாகலிங்கம் கணபதிப்பிள்ளை
43.யா/வே/345 திரு.செல்லையா பாலசிங்கம்
44.யா/வே/346 திருமதி.ஞானேஸ்வரி முத்துத்தம்பி.
45.யா/வே/353 திரு.சுந்தரம்பிள்ளை பரமானந்தம்
46.யா/வே/364 திருமதி.சறோஜினிதேவி ஜோண்பிள்ளை
47.யா/வே/369 திரு.கணபதிப்பிள்ளை சண்முகலிங்கம்
48.யா/வே/370 திரு.ஆறுமுகம் தம்பு
49.யா/வே/371 திரு.கந்தரடியார் தருமரெத்தினம்
50.யா/வே/376 திரு.செல்லப்பா ஆறுமுகம்
51.யா/வே/380 திருமதி.மாரிமுத்து இராமசாமி
52.யா/வே/387 திரு.சிவசம்பு ஆனந்தநடராசா
53.யா/வே/394 திரு.வேலுப்பிள்ளை வியாகரத்தினம்
54.யா/வே/403 திரு.கந்தையா அம்பலவாணர்
55.யா/வே/414 திருமதி.கனகம்மா கனகசபை
56.யா/வே/416 திரு.விசுவலிங்கம் கருணாகரன்
57.யா/வே/421 செல்வி.நாகேஸ்வரி தம்பிஐயா
58.யா/வே/422 திரு.நல்லதம்பி துரைஸ்வாமி
59.யா/வே/432 திருமதி.செல்லம்மா நாகலிங்கம்
60.யா/வே/456 திரு.கதிரவேலு தம்பிப்பிள்ளை
61.யா/வே/459 திருமதி.பார்வதி நாகமணி
62.யா/வே/471 திரு.செல்லையா கனகசபாபதி
63.யா/வே/474 திரு.கந்தையா சிவப்பிரகாசம்
64.யா/வே/478 திரு.சுப்பிரமணியம் கனகசபை
65.யா/வே/481 திரு.சடையர் செல்லையா
66.யா/வே/488 திருமதி.அற்புதம் சுந்தரம்பிள்ளை
67.யா/வே/489 திரு.கந்தையா துரைராசா
68.யா/வே/491 திரு.நாகநாதர் நடராசா
69.யா/வே/500 திரு.செல்லையா சோதிரத்தினம்
70.யா/வே/501 திருமதி.திருமேனிப்பிள்ளை பரராசசிங்கம்
71.யா/வே/502 திருமதி.கோணேஸ்வரி நாகரெத்தினம்
72.யா/வே/507 திரு.இளையதம்பி தருமலிங்கம்
73.யா/வே/518 திருமதி.சீதேவிப்பிள்ளை சொக்கலிங்கம்
74.யா/வே/531 திரு.சந்திரசேகரம் நமசிவாயம்
75.யா/வே/545 திருமதி.இராமாசி கதிர்காமு
76.யா/வே/547 திருமதி.குணகுந்தம்மா லோறன்ஸ்
77.யா/வே/549 திரு.பொன்னம்பலம் சதாசிவம்
78.யா/வே/551 திருமதி.மகேஸ்வரி இராசகோபாலபிள்ளை
79.யா/வே/555 திரு.கதிரவேலு பொன்னுச்சாமி
80.யா/வே/560 திருமதி.மகேஸ்வரி சுப்பிரமணியம்
81.யா/வே/579 திரு.யோபுப்பிள்ளை சாள்ஸ்செல்வராசா
82.யா/வே/583 திருமதி.கனகம்மா கோபாலப்பிள்ளை
83.யா/வே/586 திரு.கதிரவேலு கனகரெத்தினம்
84.யா/வே/601 திரு.கந்தையா நடேசு
85.யா/வே/602 திருமதி.தங்கம் பிள்ளையினார்
86.யா/வே/612 திரு.செல்லையா நடராசா
87.யா/வே/632 திரு.சின்னத்தம்பி நாகலிங்கம்
88.யா/வே/645 திரு.இளையதம்பி சின்னத்துரை
89.யா/வே/658 திருமதி.சற்குணம் நடராசா
90.யா/வே/660 திருமதி.பராசக்தி சிவப்பிரகாசம்
91.யா/வே/670 திரு.கார்த்திகேசு கனகசபை
92.யா/வே/674 திருமதி.தனவதி கனகரெத்தினம்
93.யா/வே/677 திருமதி.நாகேஸ்வரி கனகசபை
94.யா/வே/684 திரு.தனிநாயகம் சண்முகநாதன்
95.யா/வே/685 திரு.சுந்தரம்பிள்ளை லெட்சுமணன்
96.யா/வே/690 திருமதி.செல்லம்மா சோமசுந்தரம்
97.யா/வே/696 திரு.வீரகத்தி கணேசபிள்ளை
98.யா/வே/700 திருமதி.சோமசுந்தரி கதிர்காமநாதன்
99.யா/வே/702 திரு.கணபதிப்பிள்ளை தம்பையா
100.யா/வே/704 திரு.கந்தையா கதிர்காமு
101.யா/வே/710 திருமதி.பரமேஸ்வரி கதிரவேலு
102.யா/வே/714 திரு.நாகப்பன் நாகமணி
103.யா/வே/716 திரு.செல்லையா நடராசா
104.யா/வே/724 திருமதி.மீனாட்சி சிங்கராஜா
105.யா/வே/728 திருமதி.புஸ்பமணி நடராசா
106.யா/வே/737 திரு.பேதுறு இராயப்பு
107.யா/வே/740 திருமதி.அன்னலட்சுமி நாகேசு
108.யா/வே/741 திருமதி.பராசக்தி கதிர்காமு
109.யா/வே/743 திருமதி.தங்கம்மா மயில்வாகனம்
110.யா/வே/759 திரு.செல்லையா கந்தசாமி
111.யா/வே/766 திருமதி.இராசமணி சதாசிவம்
112.யா/வே/767 திருமதி.தங்கம்மா கனகசபை
113.யா/வே/768 திரு.ஆறுமுகம் கந்தசாமி
114.யா/வே/779 திரு.கிருஸ்ணபிள்ளை இரத்தினகோபால்
115.யா/வே/781 திருமதி.பொன்னம்மா கந்தையா
116.யா/வே/784 திருமதி.அலங்காரம் கந்தையா
117.யா/வே/794 திருமதி.மனோன்மணி இராசையா
118.யா/வே/820 திரு.பசுபதிப்பிள்ளை தம்பிராசா
119.யா/வே/832 திரு.கஸ்பார் சந்தியோ
120.யா/வே/843 திருமதி.பராசக்தி கதிர்காமு
121.யா/வே/849 திரு.மருதப்பு வைத்திலிங்கம்
122.யா/வே/850 திருமதி.தங்கலெட்சுமி நடராசா
123.யா/வே/852 திருமதி.செல்லம்மா சின்னத்தம்பி
124.யா/வே/863 திருமதி.மகேஸ்வரி கார்த்திகேசு
125.யா/வே/869 திரு.சிமியோன் பெனடிற்
126.யா/வே/873 திருமதி.முத்தம்மா சண்முகநாதன்
127.யா/வே/879 திரு.தில்லைநாதபிள்ளை குகநேசபிள்ளை
128.யா/வே/881 திரு.பேரம்பலம் சுந்தரமூர்த்தி
129.யா/வே/883 திரு.சுப்பிரமணியம் இராசையா
130.யா/வே/888 திரு.கதிரேசு காசிலிங்கம்
131.யா/வே/892 திருமதி.பொன்னம்மா சுந்தரம்
132.யா/வே/893 திரு.தம்பிஐயா தியாகராசா
133.யா/வே/900 திருமதி.பாலாம்பிகை செல்வநாயகம்
134.யா/வே/912 திரு.துரைச்சாமி பரஞ்சோதி
135.யா/வே/934 திருமதி.அன்னலட்சுமி செந்தில்நாதன்
136.யா/வே/936 திருமதி.பராசக்தி சின்னராசா
137.யா/வே/941 திரு.ஐயம்பிள்ளை விஸ்வரத்தினம்
138.யா/வே/966 திருமதி.மங்கயற்கரசி சண்முகம்
139.யா/வே/974 திரு.சின்னத்துரை சிவகுருநாதன்
140.யா/வே/978 திருமதி.அன்னலட்சுமி எதிர்வீரசிங்கம்
141.யா/வே/979 திரு.சின்னையா கணபதிப்பிள்ளை
142.யா/வே/988 திரு.விசுவலிங்கம் குணசிங்கம்
143.யா/வே/989 திரு.முருகேசு இராசதுரை
144.யா/வே/1001 திரு.மாணிக்கம் இலிங்கப்பிள்ளை
145.யா/வே/1003 திருமதி.செல்லம்மா நாகரெத்தினம்
146.யா/வே/1007 திரு.வேலுப்பிள்ளை சோமசுந்தரம்
147.யா/வே/1010 திருமதி.பராசக்தி திருநீலகண்டன்
148.யா/வே/1015 திருமதி.சிவயோகம் சோமசுந்தரம்
149.யா/வே/1017 திரு.சரவணமுத்து ஆறுமுகம்
150.யா/வே/1028 திருமதி.செல்லம்மா பாலசுந்தரம்
151.யா/வே/1035 திரு.பொன்னையா நடராசா
152.யா/வே/1037 திரு.முத்துவேலு நடராசா
153.யா/வே/1044 திரு.இரத்தினேஸ்வரஐயர் குகதாசஐயர்
154.யா/வே/1055 திருமதி.கண்ணம்மா சிவனையா
155.யா/வே/1056 திரு.வைத்திலிங்கம் பொன்னுத்துரை
156.யா/வே/1057 திரு.சரவணமுத்து சிவலிங்கம்
157.யா/வே/1065 திரு.அமிர்தலிங்கம் இராசையா
158.யா/வே/1068 திரு.தம்பாப்பிள்ளை வேலாயுதபிள்ளை
159.யா/வே/1070 திரு.சபாபதி அமிர்தலிங்கம்
160.யா/வே/1078 திருமதி.கனகம்மா செல்லத்துரை
161.யா/வே/1082 திருமதி.நாகலெட்சுமி திருநாவுக்கரசு
162.யா/வே/1095 திரு.தம்பு குலசேகரம்பிள்ளை
163.யா/வே/1097 திரு.வைத்திலிங்கம் சபாரெத்தினம்
164.யா/வே/1101 திரு.எட்வேட் செல்வராசா
165.யா/வே/1106 திருமதி.லெட்சுமி சோமசுந்தரம்
166.யா/வே/1111 திருமதி.திலகவதி விஸ்வநாதன்
167.யா/வே/1124 திருமதி.விசாலாச்சி நடராசா
168.யா/வே/1125 திருமதி.சரஸ்வதி தியாகராசா
169.யா/வே/1136 திரு.முருகேசு சண்முகம்
170.யா/வே/1137 திரு.கதிரவேலு பரஞ்சோதி
171.யா/வே/1138 திருமதி.புனிதவதி ஏரம்பபிள்ளை

(தொடரும்)

# அமெரிக்க சூறாவளி அனர்த்தத்தில் உயிரிழப்பு 10,000 ஆக அதிகரிப்பு

(நியூயோர்க்)

அமெரிக்காவில் சூறாவளியால் பாதிக்கப்பட்ட நியூ ஆர்லியான்ஸ் நகரில் குடிநீர் இல்லை, உணவு இல்லை, மின்சார விநியோகம் இல்லை. நோய்கள் பரவும் அபாயமும உள்ளது. ஆகவே, மக்கள் அனைவரும் ஊரை காலி செய்துவிட்டு வேறு இடங்களுக்குச் செல்வது தான் நல்லது என்று அதிகாரிகள் கூறினர்.



கேதரீன் என்ற சூறாவளிக்குப் பிறகு வீட்டைவிட்டு வெளியேறி பேக்கர் நகரில் முகாமில் தங்கிய பெண்ணிடம் அவருடைய சோக அனுபவங்களைப் பரிவுடன் கேட்கிறார் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்.

நகரில் ஆங்காங்கே அசுத்தமான நர் தேங்கிக் கிடக்கிறது. குப்பையும் குவிந்துள்ளது. மனித கழிவுகளும் அகற்றப்படாது பல நாள்களாக அப்படியே கிடக்கிறது.

குட்டைபோல தேங்கிக் கிடக்கும் நீர்தான் அதிகாரிகளுக்குப் பெரும் தலைவலியாக இருக்கிறது. அங்கு கொசுக்கள் பெருகி நோய் பரவும் நிலை ஏற்படும் வாய்ப்பு உள்ளது. அதற்காக கிருமி நாசினியை அந்த நீரின் மேல் தெளிக்கும் பணி நடந்து வருகிறது.

நியூ ஆர்லியான்ஸ் நகர் முழுவதுமே நாசமாகிவிட்டது. இங்கு உண்ண உணவு இல்லை. வேலை கிடைக்கவும் வாய்ப்பு இல்லை. அதனால் இங்கு இருப்பதில் இனியும் அர்த்தமில்லை என்று நகர துணைத் தலைவர் வாரன ரிலே கூறினார்.

ஆற்றின் கரை உடைந்து வெள்ள நீர் ஊரில் பெருக்கெடுத்து ஓடுகிறது. தெரு முழுவதும் நர் நிரம்பி ஆறுபோல காட்சி அளிக்கிறது. இந்த நீரை வெளியேற்ற குறைந்தபட்சம் மூனறு மாதங்களாவது ஆகும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாதுகாப்பு பணியில் இராணுவமும் பொலிஸாரும் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். அதனால், இதற்கு முன் நடந்த அளவுக்கு கொள்ளை, சூறையாடல் சம்பவங்கள் இப்போது இல்லை.

நியூ ஆர்லியான்ஸ் நகரில் மட்டுமே 10,000 க்கும் மேற்பட்டோர் இறந்திருப்பர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையில், சூறாவளியால் பாதிக்கப்பட்ட இடங்களில் நிவாரணப் பணிகள் போதிய வேகத்தில் நடக்கவில்லை என்று பரவலாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்த நிலையில், அதிபர் புஷ் மீண்டும் நியூ ஆர்லியான்ஸ் பகுதிக்கு கடந்த திங்கட்கிழமை வந்து மீட்புப் பணிகளை பார்வையிட்டார்.

லூஸியானா கவர்னர், மக்கள் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து நிலவரத்தை கேட்டறிந்தார். கூட்டம் சுமுகமாக நடந்தது என்றாலும் கூட, அரசு நிவாரணப் பணிகளில் ஏற்பட்ட தாமதம் குறித்து மக்கள் பிரதிநிதிகள் தங்களது கோபத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

நிவாரணப் பணிகளில் ஏற்பட்ட தாமதத்துக்கு முன்னாள் அதிபர் கிளிண்டன் கண்டனம் தெரிவித்தார். இது குறித்து விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரினார்.

ஆனால், யார் குற்றவாளி என்பதை ஆராயும் பணியில் இப்போது நேரத்தை வீணாக்க வேண்டாம். அதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். அதைவிட, மக்களின் இன்னல்களைத் தீர்த்து வழமையான நிலைமை நிலவச் செய்வதிலேயே இப்போது கவனம் செலுத்த வேண்டியது அவசியம். நம்மிடம் அனைத்து வசதிகளும் இருக்கின்றன. இவற்றைப் பயன்படுத்தி சகஜ நிலையை விரைவில் திரும்ப கொண்டுவர முடியும் என்று சிஎன்என் டிவி.க்கு அளித்த பேட்டியில் அவர் கூறியிருக்கிறார். (ற)

WORLD NEWS உலக தரிசனம்

## தைவானில் நிலநடுக்கம்

(தைபே)

தைவானில் நேற்று முன்தினம் திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது. கட்டடங்கள் பயங்கரமாக குலுங்கியதால் மக்கள் கடும் பீதியடைந்தனர்.

தைவானில் உள்ள ஹுவாலியன் நகருக்கு கிழக்கே 63 கி.மீ தொலைவில் மையம் கொண்டிருந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.1 என பதிவாகியுள்ளது. நிலநடுக்கத்தால் சேதங்கள் ஏற்பட்டதாகத் தகவல்கள் இல்லை.

தைவானில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படும். தைவானில் கடந்த 1999ஆம் ஆண்டு கடுமையான பூகம்பம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 7.6 எனப் பதிவான இந்தப் பூகம்பத்தில் 2 ஆயிரத்து 400க்கும் மேற்பட்டோர் பலியாயினர். 50 ஆயிரம் கட்டடங்கள சேதம் அடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

## இலட்சக்கணக்கில் குர்திஷ் மக்களை கொன்றதாக சதாம் இரகசிய வாக்குமூலம்



(பக்தாத்)

ஈராக்கில் சதாம் உசேன் ஆட்சி அகற்றப்பட்டு அங்கு புதிய ஆட்சி நடக்கிறது. சதாம் ஆட்சிக்காலத்தில் நடந்த கொடுமைகள், இவர் செய்த படுகொலைகள தொடர்பான வழக்கு விசாரணை அக்டோபர் 19ஆம் திகதி தொடங்குகிறது.

இந்த வழக்கை விசாரிக்கும் நீதிபதி ஒருவர் சதாம் உசேன் இருக்கும் சிறைக்கு சென்று அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார்.

அப்போது நீதிபதியிடம் சதாம் உசேன், எனது ஆட்சியில் 1 இலட்சத்து 82 ஆயிரம் குர்திஷ் இன மக்களை கொன்று குவித்தேன். நூற்றுக்கணக்கான குர்து இன மக்கள் வசிக்கும் கிராமங்களை அழித்து விடவும் உத்தரவிட்டேன் என்று தெரிவித்தார்.

சதாம் உசேனிடம் இரகசிய வாக்கு மூலம் வாங்கிய நீதிபதியும் குர்து இனத்தை சேர்ந்தவர் தான். சதாம் உசேன் இரகசிய வாக்குமூலம் அளித்ததை நீதிபதி அந்த நாட்டு அதிபர் ஜலால் தலாபானிடம் தெரிவித்துள்ளார்.

சதாம் உசேன் நீதிபதியிடம் அளித்த வாககுமூலத்தை அதிபர் தலாபானி டெலிவிஷனுக்கு அளித்த பேட்டியிலும் தெரிவித்துவிட்டார். இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது.

சதாம் உசேன் மீதான குற்றச்சாட்டுகள் நிருபிக்கப்பட்டால் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படும்.

அதிபர் தலாபானி கூறும் போது, சதாம் உசேன் இந்த நீதிபதியைக் கொல்ல 20 முறை முயற்சி செய்தார். ஆனால் அது நடைபெறவில்லை. இதற்காக அவரை 20 முறை தூக்கில் போடலாம் என்றும் தெரிவித்துள்ளார். (ற)

## சரப்ஜித் சிங்கை தூக்கிலிடமாட்டோம்

### பாக். உறுதியளிப்பு

(பக்தாத்)

உளவு பார்த்தாக கைது செய்யப்பட்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட சரப்ஜித் சிங்கை தற்போது தூக்கில் போடமாட்டோம் என பாகிஸ்தான் அரசு உறுதியளித்துள்ளது.

உளவு பார்த்ததாகவும், லாகூரில் வெடிகுண்டு வீசியதாகவும் இந்தியாவைச் சேர்ந்த சரப்ஜித் சிங் என்பவரை பாகிஸ்தான் இராணுவம் கைதுசெய்து சிறையில் அடைத்தது. சில நாட்களுக்கு முன்பு பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் சரப்ஜித் சிங்கிற்கு தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

ஆள் மாறாட்டத்தில் அப்பாவியான சரப்ஜித் சிங்கிற்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை ரத்துச் செய்யும்படியும், மனிதாபிமான அடிப்படையில் அவரை விடுதலை செய்யும்படியும் பாகிஸ்தானிடம் இந்தியா கோரிக்கை விடுத்தது.

சமீபத்தில் பாகிஸ்தான் சென்ற வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங் பிரதமர் மன்மோகன்சிங் கொடுத்தனுப்பிய கடிதத்தையும் முஷாரப்பிடம் கொடுத்தார்.

இதையடுத்து லாகூர் சிறையிலிருக்கும் சரப்ஜித் சிங்கை இந்திய தூதர் அலுவலக அதிகாரிகள சந்திக்கவும் பாகிஸ்தான் அனுமதி அளித்தது.

தூக்குத் தண்டனையை மறு ஆய்வு செய்யும்படி கோரி பாகிஸ்தான் உச்ச நீதிமன்றத்தில் சரப்ஜித்சிங்கின் வக்கீல் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

பாகிஸ்தான் அதிகாரிகள் வற்புறுத்தலின் பேரில்தான் சரப்ஜித் சிங்குக்கு எதிராக பொய்ச் சாட்சி சொன்னேன் என்று முக்கிய சாட்சி ஒருவன் தகவல் தெரிவித்ததால் சரப்ஜித்சிங்குக்கு சற்று நிம்மதியை அளித்துள்ளது.

இந்த நிலையில், சரப்ஜித்சிங்கை உடனடியாக தூக்கில் போடமாட்டோம் என்று பாகிஸ்தான் உறுதி அளித்துள்ளது. பிரதமர் அலுவலக அதிகாரிகளுக்கு பாகிஸ்தான் அதிகாரிகளிடம் இருந்து இது தொடர்பான கடிதம் வந்துள்ளது. (ற)

## இலங்கை விடயத்தில் ஐ.நா தலையிட்டால் புலிகள் தனியரசைப் பெற்று விடுவார்கள்

### ஓமல்பே சோபித தேரர்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினையில் ஐக்கிய நாடுகள் சபை தலையிட்டால் தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழர்களுக்கான தனியரசைப் பெற்று விடுவார்கள் என்று ஜாதிக ஹெல உறுமய பொதுச் செயலாளர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமைதிப் பேச்சுக்களில் நோர்வேயின் அனுசரணைப் பணி முற்றிலும் பக்கச்சார்பானது. இருப்பினும் ஐ.நா.தலையிட்டால் தமிழீழ விடுதலைப் புலிகள் சர்வதேச அங்கீகாரம் பெறுவதற்கு வசதியாக அமைந்துவிடும். அண்டை நாடுகளான இந்திய, பாகிஸ்தான், சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளை இப்பிரச்சினையில் தலையிடுமாறு அழைக்க வேண்டும.

ஐக்கிய நாடுகள் சபையை அமைதிப் பேச்சுக்களில் தலையிட அரசு அழைத்தால் தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழர்களுக்கான தனியரசு பெறுவதற்கு பங்காற்றுவதாக அமைந்துவிடும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அவ்வூடகத்துக்குக் கருத்துத் தெரிவித்த ஜே.வி.பி.கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க,

ஐக்கிய நாடுகள் சபையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழைத்துள்ளதன் மூலம் அமைதிப் பேச்சுக்களில் நோர்வே தோல்வியடைந்துவிட்டது என்பது தெரிய வந்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளை நோர்வே தரப்பினர் ஆதரித்தனர். எதிர்காலத்தில் நடைபெறவுள்ள அமைதிப் பேச்சுக்கள் குறித்து ஜே.வி.பி.எதுவும் கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை. புதிய ஜனாதிபதி பொறுப்பேற்ற பின்னரே அது குறித்து பேச இயலும். ஐ.நா.தலையீடு குறித்து எதுவும் தற்போது கருத்துத் தெரிவிக்க முடியாது எனத் தெரிவித்தார். ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச கருத்துத் தெரிவிக்கையில்,

எதிர்கால அமைதிப் பேச்சுக்கள் குறித்து நாம் இப்போது எதுவும் கூறவில்லை. புதிய ஜனாதிபதி பொறுப்பேற்ற பிறகு அது குறித்து முடிவு செய்வோம் என்றார். (ற-4)

## சுடர் ஒளி மீதான தாக்குதல்

## விசாரணை அறிக்கையை 20ற்குள் நீதிமன்றில் சமர்ப்பிக்க உத்தரவு

(கொழும்பு)

கொழும்பிலிருந்து வெளிவரும் சுடர்ஒளி தமிழ்ப் பத்திரிகையின் அலுவலகம் மீது கைக்குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட சந்தேக நபர்களை கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு கொழும்பு மேலதிக நீதிவான் சுனிவ திஸங்க பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கே நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

அத்துடன், சம்பவத்துடன் தொடர்புடைய விசாரணை அறிக்கைகளை இம்மாதம் 20ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, சுடர்ஒளி பத்திரிகையின் ஆசிரியர்பீடம், அச்சகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டபோது தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த பாதுகாப்பு உத்தியோகத்தரின் மரணம் இதயத்தில் ஏற்பட்ட பாதிப்பே என மருத்துவ அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாகவும் நீதிவான் தெரிவித்துள்ளார். (ற-8)

## இந்தியத் தூதரகத்திற்கான புதிய இணையத்தளம்

இந்தியத் தூதரகம் புதிய இணையத்தளத்தை ஆரம்பித்துள்ளது.

இந்தியத் தூதர் நிருபமா ராவ் இந்த இணையதளத்தை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்தார்.

கடவுச் சீட்டு குறித்த விபரங்கள் மற்றும் வர்த்தகம், கலாசாரம், கல்வி சேவைகள் தொடர்பான விபரங்கள் இந்த இணையதளத்தில் இடம்பெறுகின்றன.

விசா பெறுவதற்கான விண்ணப்பங்கள், இந்திய கலாசார மைய விண்ணப்பங்கள், தூதரக செய்திக் குறிப்புகள் ஆகியவையும் இதில் இணைக்கப்பட்டிருப்பதாக இந்தியத் தூதர் நிருபமா ராவ் தெரிவித்தார்.

இந்தியா குறித்த தகவல்களை அறிய இதர இணைய தளங்களுக்கான இணைப்புகளும் இத்தளத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

## 7,75, 000 விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தில் இணைவு

நாட்டிலுள்ள 7 இலட்சத்து 75 ஆயிரம் விவசாயிகள் ஓய்வூதியத்திட்டத்தில் இணைந்துள்ளனர். இவர்கள் ஓய்வூதியமாக மாதாந்தம் பெறும் தொகை 3 கோடி 20 இலட்சம் ரூபாவாகும்.

தங்களது மாதாந்த ஊதியத்தை நாட்டிலுள்ள தபால் அலுவலகங்கள் மூலம் இவர்கள பெற்று வருகின்றனர் என்று விவசாய காப்புறுதி அதிகாரசபையின் பணிப்பாளர் யு.ஆர். சந்திரதாஸ தெரிவித்தார்.

மாதாந்தம் ஆயிரம் ரூபா தொடக்கம் 4 ஆயிரத்து 500 ரூபா வரை இவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

60 வயதை அடைந்த விவசாயியே ஓய்வூதியம் பெறுவதற்கு தகுதி பெற்றவராவார். 18 வயதிற்கும் 59 வயதிற்கும் உட்பட்ட விவசாயிகள் இந்த ஓய்வூதியத திட்டத்தில் சேர்ந்து கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-7)

# குரு மாற்றம் உங்களுக்கு எப்படி?

## 19-09-2005 முதல் 20-10-2006 வரை



## மிதுனம்

**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்**

அன்பார்ந்த மிதுன இராசி வாசகர்களே! எதிலும் கண்ணும் கருத்துமாக இருக்கும் உங்களுக்கு உங்கள் வாழ்நாளில் கடந்த காலங்களில் நிலவிய சங்கடங்கள் யாவும விலகப் போகின்றன. 27.06.2005 இல் ஏற்பட்ட சனி மாற்றத்தின மூலம் உங்களுக்கு ஜென்மச் சனி முடிவடைவது மட்டுமன்றி வரும் 19.09.2005 இல் குரு பகவான் 5 ஆம் வீடடிற்குச் செல்வதால் உங்கள் வாழ்வில நல்ல பல மாற்றங்கள் ஏற்படும். குரு பகவானுக்கு உகந்த ஸ்தானமான 5இல் சஞ்சரிப்பது மூலம் உங்களின் தொழில் ரீதியாக வியக்கத்தக்க மாற்றம் ஏற்படும். பல வருடங்களாக இருந்த சங்கடங்கள முழுவதும் விலகாவிட்டாலும் 50 சதவிகிதமாவது விலகி குடும்பத்தில் அமைதி உண்டாகும். ஏழரைச் சனியில் கடைசிச் சுற்றான பாதச் சனி நடைபெற்றாலும் குரு பகவான் 5 இல் சஞ்சரிப்பதன் மூலம் உங்கள் வாழ்வில் மகிழச்சிகரமான பலனகள் நடைபெறும. மிதுன இராசியில் பிறந்த உங்களுக்கு 7, 10 க்கு அதிபதியான குரு பகவான் பஞ்சம ஸ்தானமான 5 இல் சஞ்சரிப்பதால் எதிர்பாராத பணவரவு, எதிர்பார்த்த இடங்களிலிருந்து வரவேண்டிய பணம் தக்க சமயத்தில் கிடைத்து சங்கடங்கள் யாவும் விலகும் அமைப்பு உண்டாகும். குரு பகவான உங்களுக்கு இப்பெயர்ச்சி மூலம் நீண்ட நாளைய பிரச்சினைகளை விலக்குவார்.

### ஆரோக்கியம்

முன்னைவிடச் சுறுசுறுப்பாகச் செயலபடும் ஆற்றல் ஏற்படும். எதையும் பலத்த துணிவுடனும், வெற்றியாகவும் முடிக்கும் வல்லமை உண்டாகும். நீண்ட நாட்களாக இருந்துவந்த நோய்கூட தற்போது விலகி ஆரோக்கியம உணடாகும். மனைவி வழியில் ஏற்பட்ட குறைபாடுகள் விலகி புத்திர பாக்கியம் உண்டாகும். குடும்ப வாழ்வில் சுபீட்சமும் குழந்தைகளின் பரிபூரண சுகமும் மனதில் உற்சாகத்தை ஏற்படுத்தும். குடும்ப வாழ்வில் மனநிம்மதி கிட்டும். ஜலத் தொடர்பான நோய்கள் வந்து விலகும். கெடுதல ஏதும் ஏற்படாது. மனதில் உற்சாகம் பிறக்கும்.

### செல்வம், செல்வாக்கு

செல்வ நிலையில் இதுவரை இல்லாத அளவு உயர்வும் ஏற்றமும் பெறுவீர்கள். வங்கியில் சேமிக்கும் அளவு வருமானம் பெருகும். தேவையற்ற வீண் செலவுகள் ஏறபடாது. எதிர்பாராத வரவுகள் தொடர்ந்தபடியே இருக்கும். கடந்தகாலக கடன் தொல்லைகள் மறையும். செல்வமும் செல்வாக்கும் போட்டி போட்டபடி அமையப் பெறும். ஸ்திர சொத்துகள், வீடு, மனை, வண்டி, வாகனம், ஆடை, ஆபரணச் சேர்க்கை போன்றவற்றால் பெருமிதம் அடைவீகள. பார்பபவர்கள் வியக்கும்படியான அந்தஸ்தும் பெருமையும் அடைவீர்கள். எந்தவொரு செயலும் வெற்றியையும் இலாபத்தையும் தரும்.

### குடும்பச் சூழ்நிலை

குடும்ப வாழ்வில் கொண்டாட்டமும் குதூகலமும ஏற்படும். பொருள் வரவு பிரமாதமாக அமையும். குடும்பத்திற்குத் தேவையான நவீன பொருள்களை வாங்குவீர்கள். சிலருக்கு திருமணம் கைகூடி தடபுடலாக நடைபெறும். நல்ல புததிர பாக்கியமும் உற்றார், உறவினர்களின் அன்பும ஆதரவும் பெறுவீர்கள். வாழ்வில் வளமும் பலமும் கூடும். பட்ட கடன்கள் தீரும். வெளி வட்டாரப் பழக்கமும் நண்பர்களால் உதவியும சிறப்பாக அமையும். செல்வச் சேர்க்கையால குடும்பத் தேவை அனைத்தும் பூர்த்தியாகும்.

### உத்தியோகஸ்தர்களுக்கு

நீங்கள் எதிர்பார்த்தபடியே உங்களுக்கு பதவி உயர்வும், ஊதிய உயர்வும், விரும்பிய இடமாறுதலும கிடைத்து சிலர் குடும பத்தாருடன் ஒன்று சேருவீர்கள். விருப்ப ஓய்வு பெறுபவர்கள் கூட எதிர்பாராத திருப்பத்தால் பெரிய அனுகூலப் பலனை அடைவீர்கள். புதிய வேலை தேடுபவர்களுக்கு அரசுப் பணி அல்லது பிரபலமான தனியார் துறைகளில் வேலை கிடைக்கக்கூடும். புதிய பொறுப்புகளில் அதிரடியான நடவடிக கைகளால் அனைவரையும் கவர்ந்து வெற்றிக்கொடியை நிலைநாட்டுவீர்கள். படித்துவிட்டு வேலை தேடுபவர்களுக்கு சிறந்த வேலைவாய்ப்பு கிட்டும்.

### தொழிலதிபர்களுக்கு

இயந்திரம் தொடர்பான தொழில் செய்பவர்கள் உங்கள் தொழிலில் வெளிநாடடுத் தொடர்பினை ஏற்படுத்தி வெற்றியும இலாபமும் அடைவீர்கள். வங்கிக் கடனகள் முழுமையாகத் தீரும். கொடுக்கல், வாஙகல சிறப்பாக இருக்கும். பெரும் முதலீடுகளைப் பயன்படுத்தி அபிவிருத்தியை மேற்கொளவீர்கள். இதுவரை ஏற்பட்ட சோதனைகள் விலகும். வியாபாரமும் அற்புதமாக நடைபெற்று நல்ல இலாபம் தரும். கூட்டுத தொழிலிலும் பிரமாதமான நிலை காணப்படும.

### மங்கையருக்கு

தனியார் மற்றும் அரசுத் துறையில் வேலை செய்யும பெண்களுக்கு இவ்வாண்டில் அற்புதமான உடல் நலமும் வேலைத திறனும் உண்டாகும். வேலையில்லாத படித்த பெண்கள் முயற்சி செய்து வெற்றியடைந்து நல்ல வேலையில் அமர்வீர்கள். பொன் ஆபரணமும், ஆடை அணிகலன்களும சேரும். திருமண முயற்சிகளில இப்போதீ அற்புதமான வரன் அமையப் பெறுவீர்கள்.

### கல்விநிலை

கல்வியில் நல்ல ஏற்றத்தை அடையக் கூடிய ஆண்டாகும். எழுதும் பொதுத் தேர்வுகளில் சிறப்பான மதிப்பெண்களையும சாதனைகளையும் செய்யக்கூடிய வாய்ப்பு அமையப்பெறும். பெற்றோர் - ஆசிரியர்களின நன்மதிப்பினையும் பெறுவீர்கள். சிலர் மேற்கல்விக்காக வெளிநாட்டிற்குச செல்வீர்கள்.

### கலைஞர்களுக்கு

உங்கள் முயற்சிகளுக்கு நல்ல பலன்களைப் பெறுகின்ற காலமாகவே அமையும புதிய வாய்ப்புகள் கிடைக்கும. இருக்கும்பட வாய்ப்புகளை நல்ல முறையில முடிததுக்கொடுத்து அனைவரின் பாராட்டுகளையும் பெறுவீர்கள். தொழில் ரீதியாக போட்டிகள் விலகி ஏற்றமும் சிறப்பான பணவரவுகளும் உண்டாகும். சிததிரவேலை, சிற்பவேலை, தச்சு வேலை, ஆடை அணிகலன் செய்பவர்களும் அற்புதமான வேலைவாய்ப்பும் பண வசதியும் பெறுவீர்கள். ஏற்றமும நன்மையும் பெருகும்.

### உழவர்களுக்கு

உங்கள் உழைக்கும் திறனால் மற்றவர்களை விடவும் முன்னேற்றத்திற்கு வந்துவிடுவீர்கள். முதலாளிகளிடம் சற்றே ஆதரவாக நடந்துகொண்டு நற்பெயர் பெறுவீகள. விவசாய மேம்பாடுகளால் அதிகமான உற்பத்திப் பெருக்கமும் தானியங்களின் மூலம் இலாபகரமான விலையையும் பெறுவர்கள். அரசு மூலம் உதவிகளும் மானியமும் கிடைக்கும். ஆழ்கிணறு அமைக்கும திட்டமும் நிறைவேறும்.

### இளைஞர்களுக்கு

மிகவும் திறமைசாலிகளாக செயல்படும் வலிமை, வல்லமை உருவாகும். சிலர் கற்ற வேலையினைப் பயன்படுத்தி அதன் மூலம் புதிய வாய்ப்புகளையும் பெறுவீர்கள். பெறறோரின் அன்பும் அரவணைப்பும் உதவிகளும் கிடைக்கும். சிலர் தேசத் தொண்டிலும் ஈடுபட்டு பலரது பாராட்டுகளைப் பெறுவீர்கள். யாவரும் உதவுவார்கள்.

### குரு பகவான் துலாத்தில் சித்திரை நட்சத்திரத்தில் 19-09-2005 முதல் 20-10-2005 வரை

கடந்த காலத்தில் இதுவரை ஏற்பட்டு வந்த சோதனைகள் தற்போது சூரியனைக் கணட பனி போல மறையும். கொடுக்கல், வாங்கலில் இருந்த சிக்கல்கள் நீங்கும. அனுகூலமற்ற நிலையிலிருந்து விலகி ஏற்றமான இலாபப் பலனை அடைவீர்கள். கடன்கள் தீரும். வரவேண்டிய பாக்கிகளும் வந்து சேரும். பெரும் தொகைகளையும் தைரியமாகக் கடன் கொடுத்து வாங்க முடியும். பெரிய மனிதர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். எதிர்பார்த்ததை விடவும் பிரமாதமான இலாபம், தொழில், வியாபார நிலையில் புதிய முதலீடுகள், புதிய தொழில் தொடக்கம் போன்ற பலன்கள் அமையும். பெண்களுக்கு ஆடை, ஆபரணம் சேருவதுடன் நினைத்தவரையே கைபிடிக்கும் யோகமும் அமையும். திருமணத்தடை விலகி நல்ல முறையில் திருமணம் நடைபெறும். குழந்தைப் பாக்கியம் அமையும். உற்றார், உறவினர்களின் வருகையால மனமகிழ்ச்சி உண்டாகும். பொருளாதார நிலை பிரமாதமாக அமைவதால் வீடு, மனை, வண்டி, வாகனம் வாங்கிடும் யோகமும் அமையும். சிலருக்கு வங்கியில் சேமிப்புகள் பெருகும். அரசியல்வாதிகளுக்கு பெயர், புகழ் கூடும். சிலருக்கு வெளிநாடு சென்று மேற்கல்வி பெறுகின்ற யோகமும உண்டாகும்.

### குரு பகவான் துலாத்தில் சுவாதி நட்சத்திரத்தில் 21-10-2005 முதல் 26-12-2005 வரை

இக்காலத்திலும் நீங்கள் வாழ்வில் படிப்படியான ஏற்றத்தை எதிர்பார்க்க முடியும். மனதில் இருந்த கவலை, கஷ்டம் மற்றும் சோதனைகளிலிருந்து விடுபடப் போகிறீர்கள். உடல்நலம் படிப்படியாகத் தேறிவிடும். மனைவியின் வயிறறுக் கோளாறுகள் விலகி புத்திர பாக்கியத்தினை அடைவீகள். திருமணமாகாதவர்களுக்கு உற்றார், உறவினர்களின் உதவியால் நல்ல வரன் கைகூடி வந்து திருமணம் நடைபெற்று மனமகிழ்ச்சியை ஏற்படுத்தும். வண்டி, வாகனத்தைப் பழுது பார்க்க வேண்டியிருக்கும். அசையாச் சொததுகளின் மேல் இருந்த வம்பு, வழககுகளை சிறிதளவு செலவு செய்து சாதகமான பலனை அடைவீகள். அரசியலில் சிரழப்பட்டாவது வாக்குறுதிகளைக் காபபாற்றினால் உங்கள் பெயர், புகழ், செல்வம, செல்வாக்கு உயருகின்ற காலமாகவே அமையும். மாணவர்களுடைய முயற்சிகள் வெற்றியினை ஏற்படுத்தும். விவசாயிகள் நற்பலனை அடைவீர்கள். பொருளாதார நிலையில் தடைகள் உடைந்து செல்வ நிலை உயரும்.

### குரு பகவான் துலாத்தில் விசாக நட்சத்திரத்தில் 27-12-2005 முதல் 02-03-2006 வரை

நங்கள் புதிய செயல்களில் ஈடுபட்டு வெற்றி பெறுவீர்கள். கடந்த ஆண்டில் தடைப்பட்ட விஷயங்களை நிறைவேற்றி சாதனையாக்குவீர்கள். தேவையற்ற கவலைகள் விலகும். புதிய வண்டி, வாகனம், மனை, யோகம் ஆகியவை உண்டாகும். கணவன்- மனைவியிடையே உறவில் அறபுதமான ஒற்றுமை அமையும். புத்திர வழியில் உதவியும் பெருமையும் ஏற்படும். எடுக்கின்ற முயற்சிகளில் வெற்றி உண்டாகும். பொருளாதார நிலை வெகு உன்னதமாகக் காணப்படும். கடன்கள் யாவுமே பைசலாகி மன நிம்மதியை ஏற்படுத்தும். உடல்நலம் அற்புதமாக இருககும். பலமும வலிமையும் கூடும். தாய், தந்தை நலமும சிறப்படையும். மருத்துவச் செலவுகள் ஏற்பட வழியில்லை. புதிய வேலைவாய்ப்புகள் அதிகமாகி மனமகிழ்ச்சி ஏற்படும். சிலர் உயர்கல்விக்குச் செல்வீர்கள். சாதனைகளைப் படைக்கும் நிலை உருவாகும். திருமண சுபகாரியம் வெகு சிறப்பாக நடைபெறும். மாணவர்களின் கல்வியில் சிறப்பான ஏற்றம் ஏற்படும். ஆசிரியரின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். விவசாயிகளுககு கடன் தொல்லைகள் நீங்கி அனுகூலப் பலன் அதிகமாகும்.

### குரு பகவான் வக்ர நிலையில் 03-03-2006 முதல் 04-06-2006 வரை

இக்காலத்தில் ஓரளவு சிக்கல்கள் தீரும். சிலருக்கு திடீர் வெளிநாட்டு யோகமும் அமையும். நிரந்தரமான நோய்களை உடையவர்கள் மருத்துவரின் ஆலோசனைப்படி நடந்துகொண்டால் நோயின் தீவிரம் குறையும். புத்திரர், மனைவியின் உடல்நலம் படிப்படியாக முன்னேற்றமடையும். சிலர் கூட்டாளிகளுடன் செய்யும் தொழில், வியாபாரத்தில் சற்றே இலாபத்தைப் பெறுவீர்கள். புதிய வீட்டை முழுமைப்படுத்த சிறிது தாமத நிலை ஏற்பட்டாலும் இப்போது எப்படியும் கட்டி முடித்து குடியேற முடியும். திருமண முயற்சியை இப்போது மேற்கொண்டால் பிற்பாதியில் சாதகமாக முடியும். உத்தியோகத்தில் அதிகாரிகளின் கெடுபிடிகள் குறையும். புதிய வேலை அமைய சில நாட்கள் கடக்க நேரிடும. சிலசமயம் பொருள் செலவு ஏற்பட்டாலும் சில சமயம் வரவுகளும் கிட்டும். புதிய நண்பர்கள், உற்றார் உறவினர்களிடம் பண விஷயத்தில் சற்றுக் கவனமாகச் செயல்பட வேண்டும். அரசியலில் நினைத்தபடி நடைபெறச் சிறிது தாமதம் உண்டாகும. மாணவர்களின் கல்வியில் எதிர்பார்தத மதிப்பெண்கள் கிடைக்கும்.

### குரு பகவான் துலாத்தில் சுவாதி நட்சத்திரத்தில் 05-06-2006 முதல் 18-08-2006 வரை

உங்களுக்கு கடந்தகால சோதனைகள யாவும விலகிவிடும். உடல்நலம் படிப்படியாகத் தேறி சிறப்பான பலம், வளம் நிறையும். உடலில் புத்துணர்வையும் குழந்தைகளின் திருப்திகரமான நிலையையும் காண்பீர்கள். குடும்ப வாழ்வில் மன நிம்மதியும மனமகிழ்ச்சியும் உண்டாகும். பிரிந்துபோன தம்பதி ஒன்று சேருவீர்கள். திருமணத்தடை உண்டானவர்களுககு இக காலத்தில் தடபுடலாக திருமணம் நடைபெறும். உத்தியோக நிலையில் பதவி உயர்வும் ஊதிய உயர்வும் தடைப்பட்டவை தறபோது கிடைக்கும். அரசியலில் புதிய தலைமைப் பத்வி போன்ற உயர்பதவி பெறும் யோகம் சிலருக்கு அமையும். விவசாயிகள், கலைஞர்கள் சிறப்படைவீர்கள். அதிகாரிகளின் அன்பிற்குக் கட்டுப்பட நேரும். மாணவர்களின் வெற்றிகள் பெற்றோரைப பெருமைப் படுத்தும். சாதனை மேல் சாதனைகளைப படைப்பீர்கள். தொடர்ந்து கல்வி, விளையாட்டுகளில் சாதனை செய்யும் அமைப்பு ஏற்படும்.

### குரு பகவான் துலாத்தில் விசாக நட்சத்திரத்தில் 19-08-2006 முதல் 20-10-2006 வரை

இப்போதும் உங்களுடைய செல்வம், செல்வாக்கு, பெயர், புகழ் யாவும் கூடும காலமாகவே அமையும். குடும்ப வாழ்வில் தென்றல் வீசும். கணவன்- மனைவியிடையே உறவு இன்பமயமாக அமையும. தொழில், வியாபாரத்தில் கொடிகட்டிப் பறந்து சிறப்பான அபிவிருத்தியையும் ஏற்றத்தையும் இலாபத்தையும் அடைவீகள. கூட்டுத் தொழிலில் நம்பிக்கையும் நாணயமும் அதிகமாகும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றிகள் குவியும். உத்தியோக நிலையில் கௌரவமும் அந்தஸ்தும் மிகுந்த பதவிகள் நாடிவரும். சகோதரர்களுக்குள் ஒற்றுமையும் பரிவும் அதிகமாகும். தாய் வழியில் சிலருக்கு ஸ்திர சொத்து சேரும். வண்டி, வாகனம் மூலம சிறந்த அனுகூலப் பலனை அடைய முடியும். பிரியமுள்ளவர்கள் மூலம் வாழ்வில நிறையச் சாதிப்பீர்கள். தெய்வத் திருதத தலங்களுக்கு யாத்திரை மேற்கொள்வீர்கள். அந்நியதேசப் பயணமும் வெற்றிகரமாக அமையும். விவசாயிகளுக்கு விளைசசல் பெருகும்.

### நட்சத்திரப் பலன்கள்

**மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள்:**

அரசியல்வாதிகளின் பதவிக்கு இருந்த மந்தமான நிலைகள் விலகி நிம்மதி உண்டாகும். உடன் இருப்பவர்களால் ஏற்பட்ட மறைமுகத் தொல்லைகள் விலகும். மாணவர்கள் மந்தமான நிலை விலகி சுறுசுறுப்புடன் கற்று தேர்ச்சியடைவீர்கள். கொடுக்கல, வாங்கலில் பிரமாதமான நிலை உண்டாகி பெரிய மனிதர்களின் நட்பும் ஆதரவும் கிட்டும்.

ஜோதிட மேதை
பாலமுருகன்

**திருவாதிரை:**

தொழில், வியாபார நிலையில் இருந்த மந்தமான நிலைகள் விலகி படிப்படியாக இலாபமும், போட்டிகள், பொறாமைகளிலிருநது விடுபட்டு நல்ல பலன்களை அடைகின்ற நிலையும் அமையும். புதிய தொழில தொடங்குவதற்கு பெரும் முதலீடுகளை சற்றே கவனமாகச் செயல்படுத்திட வேண்டும. பெரும் தொகைகளைக் கடன் கொடுப்பதிலும் ஜாமீன் தருவதிலும் கவனமாகச் செயல்படுவது உத்தமம். உத்தியோக நிலையில் தாமதித்து பதவி, ஊதிய உயர்வுகள் உண்டாகும்.

**புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்:**

உங்களுக்கு இதுநாள் வரை நிலவிய கஷ்டங்கள், உடல்நலக் குறைகள் யாவும் படிப்படியாக விலகும். மனதில் ஒரு நிமமதியான நிலை பிறக்கும். மருத்துவச் செலவுகள் இல்லாமல் குடும்பம் சுபீட்சம் அடையும். பொருளாதார நிலையில் தடைப்பட்ட பணவரவுகள் படிப்படியாக உண்டாகி பட்ட கடன்களைத் தீர்த்துக் கொள்வீகள. குடும்பத்தில் சுபகாரியம் நல்ல விதத்தில் முடியும்.

**பரிகாரம்:**

உங்கள் இராசிக்கு ஏழரைச் சனியில் கடைசிக் காலமான பாதச்சனி நடைபெறுகிறது. எனவே நீங்கள் சனி தோறும் வரதம் மேற்கொண்டு தினமும் காக்கைக்கு எள் கலந்த அன்னம் வைப்பதும், சனி பகவான ஆலயம் சென்று சனிக்கிழமைகளில் கரு நீல மலர்களால் சனி பகவானுக்கு அர்ச்சனை, ஆராதனை செய்வதும அங்கு வாசலில் உள்ள ஏழை, உடல் ஊனமுற்றவர்களுக்கு அன்னதானம், ஆடை தானம் அளிப்பதும் உங்களது வாழ்வில் ஏற்படும் சோதனைகளையெல்லாம் விலக்கி படிப்படியான ஏற்றத்தினை ஏற்படுத்தித் தரும்.

(தொடரும்...)

# வீரப்பன் வாழ்வும் வதமும்

## மீள் பார்வை


என். சொக்கன் 15

வீரப்பனால் கடத்தப்பட்ட நாகப்பா, ஒரு சர்க்கரை நோயாளி. அவர் இப்போது எப்படி இருக்கிறார் என்று யாருக்கும் தெரியவில்லை. அவருடைய நலனை விசாரித்து வருவதற்குக் கூட, யாரையும் காட்டுக்கு அனுப்ப முடியவில்லை.

இதற்கிடையே, கொளத்தூர் மணியை விடுதலை செய்து, காட்டுக்குள் அனுப்புவதற்கு வீரப்பன் விடுத்திருந்த கெடு, நெருங்கிக் கொண்டிருந்தது. ஆனால், தூதுவர் விஷயத்தில் கர்நாடக அரசு எந்த முடிவும் எடுக்கவில்லை.

இந்த நிலைமை பல நாள்களுக்குத் தொடர, 'கர்நாடக அரசு, நாகப்பாவைக் காப்பாற்ற விரும்புகிறதா, இல்லையா?' என்று கேள்விகள் எழுந்தன. நாகப்பா விஷயத்தில் காட்டப்படும் அக்கறை இல்லாத மெத்தனத்தை, அவருடைய குடும்பத்தினர் வன்மையாகக் கண்டித்தார்கள்.

ஒரு கட்டத்தில், இனிமேல், அரசாங்கத்தை நம்பி எந்தப் பலனும் இல்லை என்று முடிவெடுத்த நாகப்பா குடும்பத்தினர், அவரை விடுவிப்பதற்குத் தங்களால் ஆன முயற்சிகளில் இறங்கினார்கள்.



தமிழக முதல்வர் ஜெயலலிதா உட்பட பல்வேறு அரசியல், மதத் தலைவர்களைச் சந்தித்து, தங்களின் பிரச்சினைகளையும், எஸ்.எம்.கிருஷ்ணா தலை மையிலான கர்நாடக அரசின் அக்கறை இன்மையையும் விளக்கிச் சொன்னார் கள். உண்ணாவிரதம் இருந்தார்கள். பந்த், போராட்டங்கள் அறிவித்தார்கள். வானொலியில் வீரப்ப னுடன் பேசினார்களா. தாங்களே காட்டுக்குள் நேரடியாகச் செல்லப் போவதாக மிரட்டிப் பார்த்தார்கள். ஆனால், இந்த முயற்சிகளில் எதுவும் வீரப்பனிடம் எந்தச் சலனத்தையும் உணடாக்கியதாகத் தெரியவில்லை.

இத்தனை அல்லோலகல்லோலங்களுக்கு நடுவே, ஒரே ஒரு விஷயம் தான், நாகப்பா குடும்பத்தினரை ஓரளவு நிம்மதியாக வைத்திருந்தது. இத்தனை ஆண்டுகளில் வீரப்பன் பலரைக் கொன்றிருக்கிறான். என்றாலும், அவனால் கடத்தப்பட்டவர்கள் யாரையும் அவன் அநாவசியமாகக் கொலை செய்ததில்லை. அவனுடைய கோரிக்கைகள் நிறை வேறாவிடடால் கூட, அவர்களைத் திருப்பி அனுப்பிவிடுவது தான் அவனுடைய பழக்கம். ஆகவே, நாகப்பாவுக்கு எதுவும் ஆகாது என்று அவர்கள் நம்பினார்கள்.

ஆனால், அடுத்த சில வாரங்களில், அவர்களுடைய அந்த நம்பிக்கை பொய்த்துப் போனது.

முன்னாள் அமைச்சர் நாகப்பா கடத்தப்பட்டு, நூறு நாள்களுக்கு மேல் ஆகிவிட்ட நிலையில், டிசம்பர் 8ஆம் திகதி காலையில், நாகப்பாவை விடுவித்துவிட்டதாகத் தகவல் அனுப்பினான் வீரப்பன். ஆனால், அதேசமயத்தில், தமிழக அதிரடிப் படையினர் வீரப்பன் கும்பலைத் தாக்கியதாகவும், அதில் நாகப்பாவுக்கு காயம் ஏற்பட்டுவிட்டதாகவும் சொல்லி இருந்தான் அவன்.

ஆனால், இந்தத் தகவல் வெளியானதுமே, 'நாங்கள் வீரப்பனையோ, நாகப்பாவையோ தாக்கவில்லை' என்று தமிழக அதிரடிப்படை உறுதியாக மறுத்தது.

நிஜத்தில் என்னதான் நடந்தது என்று புரியாமல் நாகப்பாவின் குடும்பத்தினர் தவித்துக் கொண் டிருக்க, அன்று மாலை, சாம்ராஜ் நகர் மாவட்டத்தைச் சேர்ந்த சாங்டி வனப்பகுதியில், துப்பாக் கிக் குண்டுகளால் துளைக்கப்பட்ட நிலையில் நாகப்பாவின் சடலம் கண்டெடுக்கப்பட்டது.

சற்றும் எதிர்பாராத நேரத்தில் வெளியான இந்த திடுக்கிடும் செய்தி, கர்நாடகத்தையும் தமிழகத்தையும் உலுக்கியது. இந்தக் கொலைக்கு யார் காரணம் என்பது பற்றி சூடான விவா தங்கள் தொடங்கின.

வீரப்பன்தான் நாகப்பாவைக் கொன்றுவிட்டான் என்று ஒரு தரப்பினரும், தமிழக அதிரடிப் படையினரின் வேலைதான் இது என்று சிலரும் வாதிட்டார்கள். இந்த விஷயத்தில் கர்நாடக அரசு போதுமான கவனம் செலுத்ததால் தான், இப்படியொரு துயரச் சம்பவம் நேரிட்டுவிட்டது என்று பலரும் கருத்துத் தெரிவித்தார்கள்.

உண்மையில் நாகப்பாவைக் கொன்றது யார் என்னும் சர்ச்சை இன்றுவரை ஓயவில்லை. ஆனால், இந்தச் சம்பவத்துக்குப் பின் கைதான வீரப்பனின் கோஷ்டியைச் சேர்ந்த மூவர் (அமல் ராஜ், சகாயராஜ், மொதலமுத்து) வீரப்பன் தான் நாகப்பாவைக் கொன்றான் என்று தெரிவித்தனர்.

வீரப்பனின் தம்பி அர்ச்சுனன், கர்நாடக அதிரடிப்படையினர் வசம் இருந்தபோது, தற்கொலை செய்துகொண்டான். ஆனால், அவனை அதிரடிப்படையினர்தான் கொன்றுவிட்டார்கள் என்று வீரப்பன் உறுதியாக் எண்ணியிருந்தான். ஆகவே, தன் தம்பியின் மரணத்துக்குப் பழிவாங்கு வதற்காகத்தான், நாகப்பாவை வீரப்பன் கொலை செய்தான் என்று வீரப்பனின் அந்த முன்னாள கூட்டாளிகள் சொன்னார்கள்.

நாகப்பாவின் மரணத்தையொட்டிய இன்னொரு சர்ச்சை, அவருடைய பிணத்தின் அருகே கிடந்த நாட்குறிப்பைப் பற்றியது. அந்த டைரியில், வீரப்பனின் அரசியல் மற்றும் வியாபாரத் தொடர்புகளைப் பற்றி நாகப்பா எழுதியிருப்பதாகச் சொல்லப்பட்டது. ஆனால், இதுபற்றிய விசாரணைகளில், எந்தப் புதிய விவரமும் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

இப்படியாக, நாகப்பாவின் கடத்தல் விவகாரம் ஒரு சோக முடிவுக்கு வந்தது. இதையடுத்து, இரு மாநில அதிரடிப்படைகளும், காட்டுக்குள் நுழைந்து, தங்களின் தேடுதல் வேட்டையைத் தொ டர்ந்தன.

அதன்பின், சிறிது காலத்துக்கு, வீரப்பன் கும்பலைப்பற்றி எந்தப் பெரிய தகவலும் இல்லை. ஏனெனில், அவனுடைய கூட்டாளிகளில் பெரும்பாலானவர்கள் கொல்லப்பட்டுவிட்டார்கள் அல்லது கைதாகிவிட்டார்கள்.

2003 ஆம் ஆண்டு நவம்பர் மாதம், தமிழக அதிரடிப்படையின் தலைவராக, உதவி டி.ஜி.பி. விஜய்குமார் நியமிக்கப்பட்டார். 1996ஆம் ஆண்டு, தமிழகத்தன் தென் மாவட்டங்களில் ஏற்பட்ட ஜாதிக் கலவரங்களை அடக்கிப் புகழ்பெற்ற விஜய்குமார், சென்னை மாநகர போலீஸ் கமிஷன ராகவும் சிறப்பாகப் பணியாற்றியவர்.

கடின உழைப்புக்கும், குழுவாக இணைந்து இயங்கும்/இயக்கும் தன்மைக்கும் (team work) பெயர் பெற்றவர் விஜய்குமார். ஆகவே, வீரப்பனைத் தேடும் தமிழக அதிரடிப்படையை அவர் சிறப்பாக வழிநடத்திச் செல்வார் என்று தமிழக அரசு நம்பியது.

விஜய்குமாரும், அந்த நம்பிக்கையைக் காப்பாற்றி, வெற்றி பெற்றார். அதிரடிப்படைத் தலை வராகப் பதவியேற்ற ஒரே ஆண்டுக்குள், 2004ஆம் ஆண்டு, அக்டோபர் 18ஆம் திகதி இரவு, வீரப்பனையும் அவனுடைய கூட்டாளிகளையும் சுட்டு வீழ்த்தியதன் மூலம், பல பத்தாண்டுகளாகத் தொடர்ந்து கொண்டிருந்த வீரப்பனின் தேடல் வேட்டையை முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டார் அவர்.

துப்பாக்கியில் தொடங்கிய வீரப்பனின் காட்டு வாழ்க்கை, துப்பாக்கியிலேயே முடிவடைந்த கதையை, விளக்கமாகப் பார்த்துவிட்டோம். இன்னும் ஒரே ஒரு விஷயம் தான் மிதமிருக்கிறது- நடிகர் ராஜ்குமார் கடத்தல் விவகாரம்.

கர்நாடக முன்னாள் அமைச்சர் நாகப்பாவைக் கடத்துவதற்கு இரண்டு ஆண்டுகள் முன்பு தான், ராஜ்குமாரைக் கடத்தினான் வீரப்பன். ஆனால், இந்த இரண்டு கடத்தல் விவகாரங் களுக்கும், ஒரு முக்கியமான வித்தியாசம் இருந்தது. கரன்ஸி வாசமடிக்கும் அந்த விவரங்களை, நாம் விரிவாகப் பார்க்கவேண்டும்.

*(தொடரும்)*

# ஐ.தே.கவின் புத்தக வெளியீட்டை தடுத்து நிறுத்தியதாம் அரசாங்கம்

புத்தகம் அச்சிடல் மற்றும் அவற்றை வெளியிடுவதற்கான சுதந்திரத்துக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் விநியோகிப்பதற்காக புத்தகம் ஒன்றை அச்சிடும் பணியில் ஈடுபட்ட அச்சகம் ஒன்றை சுற்றிவளைத்து, அந்த நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு பொலிஸார் மூலம் அரசாங்கம் அழுத் தம் கொடுத்ததாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கையை வன்மையாகக் கண்டிப்பதாக அக் கட்சி மே[illegible] தெரிவித்துள்ளது.

இதன்மூலம், நாட்டில் புத்தகம் அச்சிடல் மற்றும் அவற்றை வெளியிடு வதறகு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் பொதுவான சட்டத்திற்கு ஏற்ப அச்சகம் ஒன்றிலிருந்து புததகம் ஒன்று வெளிவந்த பின்னரே அது தொடர்பாக நடவடிக்கை எடுக்க முடியும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு முன்ன ரேயே இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெறுவது ஜனநாயகத்தை மீறும் செயலாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் மிகவும பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய செயற்பாட்டின் ஒரு அறிகுறியாகவே இதனைக் குறிப்பிடலாம் என்று ராஜித சேனாரத்ன விடுத்துள்ள அறிக்கையில் மேலும தெரிவிக்கப்பட்டுள்ளது.(ற-7)

# எரிபொருள் விலையை அதிகரிக்கும் —தீர்மானம் அரசிடம் இல்லை—

"எரிபொருள் விலையை அதிகரிப்பது தொடர்பாக எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. அரசாங்கமோ அல்லது கூட்டுத்தாபனமோ இதுகுறி[illegible] எவ்வித தீர்மானத்தையும் எடுக்கவில்லை" என்று பெற்றோலியக் கூட்[illegible] தாபனத்தின் தலைவர் ஜாலிய மெத்தகம தெரிவித்துள்ளார்.

சர்வதேச சந்தையில் நாளாந்தம் எரிபொருளின் விலை அதிகரித்து வருவதால் கூட்டுத்தாபனம் வாராந்தம் எதிர்நோக்கும் நஷ்டத்தை கணக்கிட்டு வருகிறது. இதற்கென, விசேட குழு ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.

உலக எரிபொருளின் விலைக்கு அமையவே இலங்கையிலும் எரிபொருளின விலை இருக்கவேண்டும என்று தெரிவித்து இந்தக் குழு அறிக்கை ஒன்றை தயாரித்துள்ளது.

எனினும், விலை அதிகரிப்புக் குறித்து இதுவரை எவ்வித தீர்மானமும எடுக்கவில்லையென்று மெத்தகம தெரிவித்தார்.

தற்சமயம் ஒரு லீற்றர் பெற்றோலை 80 ரூபாவுக்கு விற்பதால் கூட்டுத் தாபனத்துக்கு 9ரூபா நஷ்டம் ஏற்படுகிறது. ஒரு லீற்றர் டீசல் எண்ணெயை 50 ரூபாவுக்கு விற்பதனால் ஏற்படும் இழப்பு 15ரூபாவாகும்.

கூட்டுத்தாபனம் ஒரு லீற்றர் மண்ணெண்ணெயை 30 ரூபா 50 சதத்துக்கு விற்றபோதிலும் கூட்டுத்தாபனம் அதற்குக் கொடுக்கும் விலை 55 ரூபா வாகும்.

இந்த நிலைமைகளிலும் கூட எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப் படவில்லையென்று கூட்டுத்தாபனத் தலைவர் தெரிவித்தார்.

அவ்வாறு அதிகரிகும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுமாயின் தேசிய மட்டத்தில் அரசாங்கத் தீர்மானமாகவே அது அமுல்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-7)

# தீவக கல்வி வலயத்தில் நடமாடும் விஞ்ஞான ஆய்வுகூட சேவை

(புங்குடுதீவு)

தீவக கல்வி வலயத்தினால் நடமாடும் விஞ்ஞான ஆய்வுகூட சேவை பாடசாலைகளில் நடாத்தப்படவுள்ளது. இவ்வாய்வு கூட சேவை பின்வரும் ஒழுங்கில் நடைபெறவுள்ளது.

| நிலையம் | பங்குபற்றும் பாடசாலை |
| --- | --- |
| | 08.09.2005 |
| வேலணை மேற்கு நடராசா வித்தியாலயம் | வேலணை நடராசா வித்தியாலயம்<br>வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்<br>சரவணை நாகேஸ்வரி வித்தியாலய |
| | 14.09.2005 |
| நயினாதீவு மகா வித்தியாலயம் | நயினாதீவு மகாவித்தியாலயம்<br>நயினாதீவு ஸ்ரீகணேசா மகாவித்தியாலய |
| | 19.09.2005 |
| காரை சுந்தரமூர்த்தி வித்தி. | - காரை சுந்தரமூர்த்தி வித்தி. |
| | 23.09.2005 |
| புங்குடுதீவு மகா வித்தியாலயம் | புங்குடுதீவு சுப்பிரமணியம் மகளிர் வித்தியாலயம்<br>புங்குடுதீவு சித்திவிநாயகர் வித்தியாலயம்<br>புங்குடுதீவு ஸ்ரீகணேசா வித்தியாலயம் |
| | 22.09.2005 |
| புங்குடுதீவு மகா வித்தியாலயம் | புஙகுடுதீவு மகாவித்தியாலயம்<br>புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம் |
| | 26.09.2005 |
| அனலைதீவு சதாசிவம் வித்தியாலயம் | - அனலைதீவு சதாசிவம் வித்தியாலயம் |
| | 03.10.2005 |
| ஊர்காவற்றுறை புனித மரியாள் பெண்கள் வித்தியாலயம் | ஊர்காவற்றுறை புனித மரியாள் பெண்கள் வித்தியாலயம்<br>கரம்பன் சண்முகநாதன் வித்தியாலயம் |
| | 04.10.2005 |
| ஊர்காவற்றுறை புனித மரியாள் பெண்கள் வித்தியாலயம் | - கரம்பன் புஸ்ப மகளிர் வித்தியாலயம் |
| | 13.10.2005 |
| நெடுந்தீவு மகா வித்தியாலயம் | -நெடுந்தீவு மகா வித்தியாலயம் |
| | 14.10.2005 |
| நெடுந்தீவு மகா வித்தியாலயம் | நெடுந்தீவு றோ.க. வித்தியாலயம்<br>நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தி. |
| | 18.10.2005 |
| நாரந்தனை றோ.க.வித்தி. | நாரந்தனை றோ.க.வித்தி.<br>நாரந்தனை கணேசா வித்தி. |
| | 21.10.2005 |
| வேலணை சரஸ்வதி வித்தி. | வேலணை சரஸ்வதி வித்தி.<br>வேலணை கிழக்கு மகா வித்தி.<br>அல்லைப்பிட்டி பராசக்தி வித்தி.<br>மண்டைதீவு மகா வித்தியாலயம் |
| | 24.10.2005,25.10.2005 |
| ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி | -புனித அந்தோனியார் கல்லூரி |

(ள-126)

அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறிவிடும் - குறள்

வலம்புரி

# இனவாத இணைவை மக்கள் புரியட்டும்

ஜனாதிபதித் தேர்தலுக்கான தேரை நகர்த்த, வடம்பிடிக்கும் ஆதரவாளர்கள், குழுக்களாகப் பிரிந்து வேட்பாளர்களுக்கான ஆதரவை உறுதிப்படுத்த தொடங்கிவிட்டனர்.

ஆதரவாளர்களை விரட்டிப்பிடிக்கும் பணியில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவும், ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவும் மிகவேகமாக வலை வீசிக்கொண்டிருக்கிறார்கள்.

வலையில் அகப்பட்டவர்களுடன் ரகசியப்பேச்சுக்களும், உடன்படிக்கைகளும், பேரத்தொகைகளும், சலுகை அறிவிப்புக்களும் அள்ளிவீசப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இன்னும் அகப்படாதவர்களை வளைத்துப் போடும் அரசியல் வியூகங்களும், நகர்தல்களும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

தென்னிலங்கை அரச களம் இப்போது தனது முழுக்கவனத்தையும் தேர்தல் பக்கமே திருப்பியிருக்கிறது,

ஆனால் இன்னோர் பக்கத்தில் இலங்கையின் மிக முதன்மையான விடயமான சமாதானம் குற்றுயிராய்க் கிடந்து சேடமிழுக்கிறது.

சமாதானக்கரு கலைந்துவிடும் அபாயத்தில் அதனை நசுக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இதனை தமது வெற்றிக்கு வாய்ப்பாக பயன்படுத்த இலங்கையில் இனவாத சக்திகள் ஒன்று திரண்டிருக்கின்றன.

சமாதானத்தை கேள்விக்குறியாக்கி இனவாதத்தின் மூலம் தமது குறிக்கோளை அபிலாசைகளை அடைந்து கொள்ள, இனவாத சக்திகள் துடித்துக் கொண்டிருக்கின்றன.

பிரதமரும் ஜனாதிபதி வேட்பாளருமான மகிந்த ராஜபக்ஷவை தமது இலக்கை அடைந்து கொள்ளும் துரும்பாக பயன்படுத்த இனவாத சக்திகள் முடிபு செய்து விட்டன.

இதன் வெளிப்பாடுதான் ஒன்றின் பின் ஒன்றாக இனவாதிகளின் ஆதரவு மகிந்தராஜபக்ஷவின் பக்கம் திரும்பியிருப்பதாகும்.

இனவாதத்தையே கொள்கை மந்திரமாக செப்பும் ஜே.வி.பி.மகிந்தவை ஆதரிக்க முடிபு செய்ததை அடுத்து, அதே முடிவை ஜாதிக ஹெல உறுமயவும், தேசியபிக்குகள் முன்னணியும் மற்றும் சிறிய இன வாதக்குழுக்களும் வெளியிட்டிருக்கின்றன.

இத்தகைய இனவாதிகளின் ஒன்றுபட்ட முடிபு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவர்களின் விருப்பை தீர்ப்பாக வெளிப்படுத்தினால்! நிச்சயமாக மீண்டும் இலங்கைத் தீவில் தீ எரியும், பிணங்கள் குவியும், சமாதான கருவூலம் கலையும். இதனைப் பெரும்பான்மை சிங்கள மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். நாட்டுக்குத் தேவை சமாதானமா, போரா என்பது தீர்மானிக்க வேண்டும்.

இலங்கைத்தீவு அமைதிப்பூங்காவாக மலர நாட்டின் ஆட்சியாளர்கள், ஆட்சிக்கட்டிலில் ஏறத்துடிப் பவர்கள் தூய்மையான மன சிந்தனையுடன் நாடு பற்றிய உரிய இலக்குடன் இன, மத, மொழி, பேதங்களை கடந்து கூர்ந்து சிந்திக்க வேண்டும்.

நாட்டில் இன்றைய நிலை என்ன என்பதை புரிந்து அதனைச் சீர்படுத்த தேவை என்ன என உணர்ந்து செயற்பட வேண்டும்.

# ஜே.வி.பியுடன் கூட்டு ஒப்பந்தத்தில் மஹிந்த கைச்சாத்திடவில்லையாம்

## அமைச்சர் மங்கள மறுப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஜே.வி.பி விதித்துள்ள நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு ஒப்பந்தத்தில் கையெழுத திடப்பட்டிருப்பதாக வெளியான செய்திகளை சுதந்திரக் கட்சி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ சார்பில் அமைச்சர் மங்கள சமரவீர மறுத்துள்ளார்.

இதுகுறிதது அவர் வெளியிட்ட நீண்ட அறிக்கையிலேயே இம் மறுப்பினைத் தெரிவித்துள்ளார். ஊடகங்களில் வெளியானது போல் எதுவித ஒப்பந்தமும் இதுவரை கையெழுத்திடப்படவில்லை. இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருடனும் பேச்சுக்கள் நடாத்தப்பட வேண்டும் என்பதே அனைத்துக் கட்சிகளின் நிலைப்பாடாகும்.அமைதி முயற்சிகளை மேற்கொள்ள எந்த எல்லைக்கும் யாரையும் சென்று சந்திக்க தயார் என்பதை உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்களுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெளிவு படுத்தியுள்ளார். யுத்த நிறுத்த ஒப்பந்தம் குறித்துப் பேச வேண்டும். அதற்காக அதை முறித்துக்கொள்வது என்பது அல்ல.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் பொருளாதாரக் கொள்கைகளைப் பொறுத்தவரை, நாட்டின் வர்த்தகர்களும், பொது மக்களும், தொழிலாளர்களும் அதை வரவேற்றுள்ளனா எனவும் மங்கள சமரவீர அவ் அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ற-4)

# அரியாலை கிழக்கு விவசாயிகளுக்கு இராணுவத்தின் விசேட அ.அட்டை

(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்குப் பகுதியில் விவசாயத்தில் ஈடுபட்டு வரும் விவசாயிகளுக்கு இராணுவம் விசேட அடையாள அட்டை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

1995ஆம் ஆண்டில் இருந்து உயர் பாதுகாப்பு வலயமாக உளள இவ் அரியாலை கிழக்குப் பகுதியில் விவசாயச் செயகையை மேற்கொள்வதற்கு இராணுவம் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் அனுமதித்திருந்தது.

ஆனால், தற்போது இப் பகுதியினுள் விவசாயம் மேற்கொளவதற்கு சென்றுவரும் விவசாயிகளுக்கு விசேட அடையாள அட்டையை வழங்குவதற்கு இராணுவம் நடவடிக்கை எடுத்துள்ளது.இவ் விசேட அடையாள அட்டைக்கான படங்கள் மற்றும் விபரங்கள் நல்லூர் பிரதேச செயலகத்தினூடாக அனுப்பப் பட்டன.

இவ் விசேட அடையாள அட்டைகள் இன்று அரியாலையில் உள்ள பிரதேச செயலகத்தின் உப அலுவலகத்தில் வைத்து இராணுவத்தினரால் வழக்கப்படவுள்ளன.

எனவே இவ் அடையாள அட்டையைப் பெறுவதற்கு பிரதேச செயலகத்தில் படங்களை வழங்கியவர்களை இன்று அங்குவந்து பெற்றுக்கொள்ளும்படி நல்லூர் பிரதேச செயலா திருமதி தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார்.

மேலும் அரியாலை கிழக்குப் பகுதியில் விவசாயத்தை மேற்கொண்டுவரும் விவசாயிகளில் இவ் விசேட அடையாள அட்டையைப் பெறுவதற்கு படங்களை கொடுத்து விண்ணபபிக்காதவர்களை நல்லூர் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளும்படியும் கேட்கப்பட்டுள்ளது. (அ-19)

# சிறுவர்களின் சுகாதார நலன்பேண சிறுவர் பாதுகாப்பு நிதியம் முயற்சி

(சுதுமலை)

யாழ்.மாவட்டத்தில் உள்ள இரண்டு பிரதேச செயலர் பிரிவுகளின் 5வயதுக்குட்பட்ட சிறுவர்களின் சுகாதார நலன் பேணும் பொருட்டு சுமார் ஐம்பது நீரடைப்பு மலசலகூடங்களை புதிதாக அமைக்க சிறுவர் பாதுகாப்பு நிதியம் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான கடிதம் யாழ்.அரச அதிபருக்கும் நல்லூர், சண்டிலிப்பாய் பிரதேச செயலர்களிற்கும் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தால் கடந்த வாரம் அனுப்பிவைத்துள்ளது.

இக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சண்டிலிப்பாய் பிரதேச செயலர்பிரிவில் உள்ள ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் பிரிவில் 432 குடும்பங்களில் 134 குடும்பத்திற்கு மலசலகூடத் தேவையிருக்கிறது. இதில் இத்திட்டத்தின் மூலம் 41 புதிதாக அமைக்கப்படவுள்ளன. இவ்வாறே நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள அரியாலை மத்தி தெற்கு கிராமசேவையாளர் பிரிவில் உள்ள 36 குடும்பங்களிற்கு மலசலகூடத் தேவையிருக கின்றன. இதில் முன்னுரிமை அடிப்படையில் ஒனபது மலசலகூடங்கள் புதிதாக அமைக்கப்படவுள்ளன.

எனவே, சம்பந்தப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரிகள் இப்பகுதிகளின் மலசலகூடம் அமைப்பதற்கான இடத்தெரிவை மேற்கொண்ட பின்பு இத்திட்டம் ஆரம்பிக்கப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் சிறுவர்களின் போசாக்கு நிலை மற்றும், தொற்றுநோய்கள் போன்றவற்றை குறைக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-252)

# தேர்தல் பிரசாரங்களுக்கு பொலித்தீன் பாவனை தடை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் போது பிரசார நடவடிக்கைகளிலும், மேடைகளை அலங்கரிப்பதிலும் பொலித்தீன் பாவனையைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி பிரதான அரசியல் கட்சிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும்,ஐக்கிய தேசியக் கட்சியினதும் பொதுச செயலாளர்களுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், அலங்காரம் செய்வதற்கு துணிவகைகளையே உபயோகிக்கும்படி கேட்டுக்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற-7)

# உள்ளூராட்சி வார வேலைத்திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேசசபை உள்ளூராட்சி வாரத்தை மிக சிறப்பாகக் கொண் டாட தீர்மானித்து இருப்பதனால் எதிர்வரும் 12-18வரையான காலப் பகுதியில் பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்கமைய சனசமூக நிலையங்களுக்குக் கீழுள்ள முன் பள்ளிகளுக் கிடையில் விளையாட்டுக்கள், கலைநிகழ்வுகளை நடாத்தி பரிசில்கள் வழங்கு வதுடன், சபையின் கீழுள்ள எல்லாப் பொதுக் கிணறுகளுக்கும் குளோரி னிடல், கட்டாக்காலி நாய்களை அழித்தல் போன்ற திட்டங்களுடன் சந்தைகள், மயானங்கள்,பொது இடங்கள் போன்றவற்றில் சிரமதானப் பணி கள் சனசமூக நிலையங்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப் படவுள்ளன.

மேலும், சூழல் பாதுகாப்பு நோக்கத்துடன் பயன்தரும் மரங்களை பொது இடங்களில் நாட்டியும உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் சம்பந்த மான துண்டுப்பிரசுரம், பதாதைகள் மூலம பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல் போன்ற வேறு பல செயற்பாடுகளையும் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. (ற)

# பருவகாலச் சீட்டை பெற்றுக்கொள்க!

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளுக்கு பஸ் பயணத்தினை மேற்கொள்ளும் மாணவர்கள் தமது பருவகாலச் சீட்டினை எதிர்வரும் 10ஆம் திகதிவரை பெற்றுக்கொள்ளலாம் என வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் முகாமையாளர் கணேசபிள்ளை அறிவித்துள்ளார். (ற-4)

# தென்கிழக்காசிய சுகாதார அமைச்சர்களின் மாநாட்டின் தலைமைத்துவம் இலங்கைக்கு!


(கொழும்பு)

தென்கிழக்காசிய நாடுகளின் சுகாதார அமைச்சர்கள் மாநாட்டின் தலை மைத்துவம் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான மாநாட்டின் கூட்டத் தொடரில் 11நாடுகளின் சுகாதார அமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகள் ஏகமனதாக இத் தீர்மானத்தை எடுத்தனர்.

இம் மாநாட்டின் தலைவராக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குப் பணிபுரிவார்.

தென்கிழக்காசியப் பிராந்தியத்தில் போலியோ போன்ற நோய்களினை ஒழிப்பதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் தீவிர கவனம் செலுத்த வேண்டும என அமைச்சர் கூட்டத்தொடரில் சுட்டிக்காட்டினார். (ற-4)



# சாயி அருளமுதம்

ஒருவர் இப்போதிருக்கும் நிலையிலிருந்து ஆன்மாவை அறியும் நிலைக்கு முன்னேற வேண்டும். பூக்கள் விரைவில் வாடி அழுகிவிடும். பூக்களை அர்ப்பணித்தால் ஏற்படும் விளைவு அதிக காலம் நீடிக்காமல் போகலாம். மனிதனின சொந்த வாழ்க்கை என்னும் விருட்சத்தில் தனது சொந்தத் திறமையினாலும கபடமற்ற உள்ளத் தினாலும் உணவளிக்கப் பட்டுப் பேணப்பட்டு மலரும் புஷ்பங்களையே கடவுள் அதிகமாக நேசிக்கிறார். மனிதனுடைய இதயம் என்ற மலர்ச் சோலையில் வளரும் நற்குணங்களின் மலர்களே அவையாகும்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

# கருணா குழு உறுப்பினர்களுடன் கண்காணிப்புக் குழுவினர் சந்திப்பு !

## இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் நடந்ததாம்

(கொழும்பு)

யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கும், கருணா குழுவினருக்குமிடையிலான சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

இச் சந்திப்பு அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள ஏ-11சாலையின் அருகே கருணா அணியின் நடமாட்டம் அதிகம் இருப்பதாக கூறப்படும் கிராமம் ஒன்றில் நடைபெற்றதாக கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலனி ஒல்ஸ் ரோட்டியர் தெரிவித்தார்.

அவர்கள் யார் என்பதைக்கூட சரிபார்க்க முடியவில்லை. அவர்கள் தங்களை கருணா அணியினர் என்று சொல்லிக்கொண்டார்கள் என்பதைத் தவிர வேறொன்றும் தமக்குத் தெரியாது என கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் தெரிவித்தார். இதுவொரு முறையற்ற சந்திப்பே ஆயினும் இவர்களுடன் எதிர்வரும் காலத்தில் எந்தவிதமான சந்திப்பும் நடாத்தப்போவதில்லை என்று யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு முடிபு செய்துள்ளது.

எமது கண்காணிப்பாளர்கள் ரோந்துப்பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொழுது அவர்கள் கண்காணிப்பாளர்களை அணுகியுள்ளனர்.

எம்மைப் பொறுத்தவரை நாங்கள் அரசு -விடுதலைப்புலிகள் ஆகியோரிடம் இருந்துதான் எங்களது பணி வரம்புகளைப் பெறுகின்றோம்.

கருணா அணியினரை இவ் யுத்தநிறுத்த ஒப்பந்தத்திற்குள் இணைக்கவேண்டுமானால் அது மற்ற இருதரப்பினரின் அனுமதியுடன்தான் நடாத்தப்படும் என கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒல்ஸி ரோட்டியர் மேலும் தெரிவித்தார். (ச-4)

# கொடிகாமத்தில் தொடரும் பதற்றம் பொலிஸாரும் இராணுவமும் குவிப்பு

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற அசம்பாவிதங்களை அடுத்து நேற்று அப்பகுதிகளில் பதற்றம் நிலவியது. நேற்று முன்தினம் மாலையுடன் மூடப்பட்ட கடைகள் எவையும் திறக்கப்படவில்லை.

பாடசாலைகளில் மாணவர் வரவு குறைவாகவே இருந்தது என்றும் போக்குவரத்துக்கள் வழமை போல் நடைபெற்றன. அப்பகுதியில் இராணுவ பாதுகாப்புடன் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை நேற்று முன்தினம் மாலை சிலரால் வீசப்பட்ட கைக்குண்டுகள் சில வெடிக்காத நிலையில் நேற்றுக்காலை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. (ச-124)

# போராளிகள் மீதான தாக்குதல் குறித்து தலைமைப்பீடம் தகுந்த முடிபு எடுக்கும்

## சு.ப.தமிழ்ச்செல்வன் அறிக்கை

படைத்தரப்பு ஆயுதக்குழுக்களை தங்களது படை முகாம்களுக்கும் பாதுகாப்புக்குள் ளேயும் வைத்து புலிகள் மீதான தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன. இந்த நிலைமையை நாங்கள் தொடர்ந்தும் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது .

இதன் முதற்கட்ட நடவடிக்கையாகத்தான் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் எங்களுடைய போராளிகளை பாதுகாப்பாக எமது நிர்வாகப் பகுதிக்குள் வரவழைத்து இருக்கின்றோம்.

அடுத்த கட்ட நிலைமைகளைப் பொறுத்துதான் அடுத்த கட்ட முடிபுகளை எமது தலைமைப்பீடம் எடுக்கும். ஜனாதிபதி தேர்தலில் ஜே.வி.பி. யின் 12 நிபந்தனைகளையும் ஜாதிக ஹெல உறுமயவின் 11 நிபந்தனைகளையும் மகிந்த ராஜபக்ஷ ஏற்றுள்ளமை குறித்து தெரிவிக்கையில்

இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை ஏனெனில் இதைத்தான் செய்து கொண்டு இருக்கிறார்கள். இப்போது வெளிப்படையாக அறிவித்திருக்கிறார்கள் அதாவது ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய முன்வைத்து இருக்கும் நிபந்தனைகள்தான் இப்போது நடைமுறையில் இருக்கின்றன.

ஏனெனில் இந்தப் பொதுக் கட்டமைப்பு, அமைதிப் பேச்சு வார்த்தை ,யுத்தநிறுத்த அமுலாக்கம் உள்ளிட்ட அவர்கள் நிபந்தனைகளாக எதனையெல்லாம் வெளிப்படுத்தி இருக்கிறார்களோ அவ்வளவும் இப்போது நடைமுறையில் இருக்கின்றது. அதை வெளிப்படையாக ஏற்றுக்கொண்டு அறிவித்துள்ளார்கள்.

போராளிகள் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்கிற ஒரு உறுதியான தீர்வைப் பெற்ற பிறகே அரசியல் பணிகளில் ஈடுபட போராளிகளை அனுப்புங்கள் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்தனர் அந்த அடிப்படையில்தான் நாங்கள் முடிபு மேற்கொண்டுள்ளோம் என்றார். (ச-8)

# ஐ.நா.தூதுவருடன் ரணில் நேற்று சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தூதுவர் லக்தர் பிராக்மியை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினார்.

கொழும்பில் உள்ள ரணிலின் இல்லத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது. இலங்கை இனப்பிரச்சினைக்கான சமாதான செயற்பாடுகள் குறித்தும் நாட்டில் தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்தும் ஐ.நா. தூதுவரிடம் ரணில் விளக்கினார் என்று கட்சியினர் தெரிவித்தனர். (ச-4,8)

# அரசு-புலிகள்...

நோர்வே அரசு தீர்மானித்திருக்கிறது இலங்கையின் இந்த விமான நிலையம் இருப்பதால் அரசு இதை ஏற்றுக்கொள்ளும் வெளிநாட்டுப் பயணங்களுக்காக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் பல மணிநேரங்கள் தங்கிச் செல்கின்றனர்.

இதையடுத்தே கட்டுநாயக்க விமான நிலையத்தையே பேச்சுக்களுக்கான இடமாக தேர்வு செய்வது என்று நோர்வே முடிபு செய்துள்ளது. இதனால் கொழும்பு விமான நிலையத்தில் பேச்சுக்களை நடாத்துவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளும் ஒப்புக்கொள்வார்கள்.

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமான பேச்சுக்களை விரைவில் கொழும்பு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நோர்வே அரசு நடாத்தும் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நோர்வே அனுசரணையாளர்களின் முடிவுக்கு அரசாங்கம் ஆதரவு தெரிவித்துள்ளது இது தொடர்பாக தமது ஆதரவினை நோர்வே அரசுக்கு அரசாங்கம் அனுப்பிவைத் துள்ளது. விடுதலைப் புலிகளுக்கு இன்று அறிவிக்கவுள்ளது. (ச-4)

# வெட்டுப்புள்ளிகள் 20ஆம் திகதி வெளியாகும்

(கொழும்பு)

இவ் வருடம் நடைபெற்ற க.பொ.த உ/தரப் பரீட்சையின் பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் இம்மாதம் 20 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது. பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப்பத்திரங்கள் அடுத்த மாதம் 15ஆம் திகதி முதல் கோரப்படவுள்ளன.

இம் முறை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. சென்ற வருடம் 14850 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இம்முறை 16292 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்ப டுகின்றது.

இவ் வருடம் 17 பட்டப்படிப்பு கற்கை நெறிகள் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது . (08)

## இராணுவம்...

மற்றைய நபர் மோட்டார் சைக்கிளை விட்டுவிட்டு தப்பிச்செல்ல முயன்ற வேளை படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ச-8)

## கிழக்கிலிருந்த...

வத்தினராலும் அவர் களோடு சேர்ந்தியங்கும் ஆயுதக் குழுக்களினாலும் மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களினையடுத்து அரசியல் பணிப் போராளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது .

இந் நிலையில் அரசியல்துறைப் போராளிகளை கடத்திச் செல்லவும் இராணுவப் புலனாய்வுத்துறையும் அதனோடு இயங்கும் ஆயுதக் குழுக்களும் திட்டமிட்டுள்ளதாக தெரியவந்துள்ளது விடுதலைப் புலிகளை போருக்கு சீண்டிவிடும் இத்தகைய தாக்குதல்களுக்கும் இழப்புக்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை இம் முடிவை மேற்கொண்டதாக விடுதலைப்புலிகள் தரப்பு தெரிவித்துள்ளது. (ச-4)

# உயர்தரப்பரீட்சை பெறுபேறுகள்...

இடத்தைப் பெற்றுள்ளார்.

இதைவிட அக்கல்லூரியின் விழிப்புலனற்ற மாணவியான செல்வி தே.டயானி கலைப்பிரிவில் 2ஏ, எஸ் பெறுபேற்றைப் பெற்றுள்ளார்.

இதேவேளை இவ்வருடம் நடைபெற்ற க.பொ.த உயர் தரப்பரீசையின் பெறுபேறு களின் அடிப்படையில் ஒரு லட்சத்து 16ஆயிரத்து 506 பேர் பல்கலைக் கழகத்திற்கு அனுமதிபெற தகுதி பெற்றிருப்பதாகவும் இது கடந்த வரு டத்தைவிட 6 ஆயிரம் பேரால் அதிகரித்திருப்பதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுரஎதிரசிங்க தெரிவித்துள்ளார்.

இம்முறை 2 ஆயிரத்து 910 பேர் சகல பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர். மாணவர்கள் தமது பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கு இம் மாதம் 27ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியுமென பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார்.

கொழும்பு றோயல் கல்லூரியைச் சேர்ந்த தீலீபசந்துருவன் என்ற மாணவனே உயிரியல் பாடத்தில் கூடுதலான புள்ளியைப் பெற்றுள்ளார்.

கலைத்துறையில் கண்டி மாவாய மகளிர் கல்லூரி மாணவி சத்துரிக்கா ஜீவனி என்ற மாணவியே ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

நேற்றுக்கிடைக்கப்பெற்ற யாழ். மாவட்ட பாடசாலைகளின் முன்னணிப்பெறுபேறுகள்.

*வேம்படி மகளிர் கல்லூரி*

**உயிரியல் பிரிவு**

மயூரதி சரவணபவானந்தன் 3 ஏ, மேரி நிரோசினி முத்துக்குமாரசாமி 3 ஏ, ஜனகா பரமராஜா 3 ஏ பவித்ரா சதானந்த சர்மா 2 ஏ, பி சாலினி பேரின்பநாதன் 2 ஏ, பி , கேமலதா தங்கராஜா 2 ஏ, பி, தனுஜா மகேந் திரன் 2 ஏ, பி , உமானந்தினி முத் துராஜா 2 ஏ, பி, சிவந்தினி பழனி வேற்பிள்ளை ஏ, 2 பி,

**கணிதப்பிரிவு**

ஜனனி பரமராஜா ஏ, 2 பி, சுரேகா பத்மநாதன் ஏ,2 பி, காயத்திரி அருளானந்தம் 2 ஏ, பி,

**வர்த்தகப்பிரிவு**

கௌசிகா ராஜசேகரம் 3 ஏ, இந்துஷா அரியரட்ணம் 3 ஏ, நிரஜா ஸ்ரீஸ்கந்தராஜா 3 ஏ, நொய்லின் ஜீவிதா பெனடிக்ற் 3 ஏ, விக்னேஸ்வரி அம்பலவாணர் 3 ஏ, வினோதினி வேலாயுதபிள்ளை 3 ஏ, சுகன்யா ஸ்ரீஸ்கந்தராஜா 3 ஏ, தர்சினி கந்தசாமி 2 ஏ, பி, தர்சினிபாலேந்திரா 2 ஏ, பி, சர்மிளா செல்வநாயகம் 2 ஏ, பி, சிந்துஜா வைத்தீஸ்வரன் 2 ஏ, பி,

**கலைப்பிரிவு**

பிரியா துரைரட்ணம் 2 ஏ, பி, வினோதினி கனகாம்பரம் 2 ஏ, பி, சிந்து சுந்தரமூர்த்தி ஏ, 2 பி,

***யாழ்.இந்துக்கல்லூரி***

**கணிதப்பிரிவு**

சி. மயூரன் 3 ஏ , ந.பானுகோபன் 3 ஏ , ச்.தனேசன் 3 ஏ , கு.முகுந்தன் 3 ஏ , ச.நடராஜசர்மா 3 ஏ ,

**உயிரியல் பிரிவு**

பொ. சிவபாலன் 3 ஏ ; ம.விஷ்ணுகாந் 3 ஏ ,

**வர்த்தகப்பிரிவு**

செ.சிவதர்சன் 3 ஏ ,

**தெல்லிப்பழை யூனியன் கல்லூரி**

**கலைப்பிரிவு**

செ.சிவசொரூபன் 3 ஏ, செ.திருக்குமரன் 3ஏ , கி.சிறீதரன் 3 ஏ ; த.மோகனா டயானி 3 ஏ , ம.மயூரி 3 ஏ , இ.தசரதன் 2 ஏ, பி, க.துஷாந்தினி 2 ஏ, பி,பா.எட்வேட் சுஜீவன் 2 ஏ, பி, நி.சுஜீந்தன் 2 ஏ, பி, ச.நிசாந்தி 2 ஏ,பி, பா.பிரசாத் 2 ஏ, பி, தே.டயானி (விழிப்புலனற்றவர்) 2ஏ, எஸ்,

**வர்த்தகப்பிரிவு**

மு.சொரூபினி 3 ஏ, மு.மயூரா 2 ஏ, பி,

**கணிதப்பிரிவு**

இ.ஜானகிராம் 2 ஏ, பி, பா.டினேஸ் 2 ஏ, சி, பா.டிலீபன் ஏ, 2 பி,

**யாழ்.கனகரத்தினம் ம.ம. வித்தியாலயம்**

***கலைப்பிரிவு.***

செல்லத்துரை மயூட்சன் 3 ஏ; (ச-8)

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
கார்த்திக், ரோஜா, ரம்பா, விவேக் நடித்த
சந்தித்த வேளை
கா.நே: 11.00, 2.45, 6.00,(பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
வேணு, ரோஜா, K.R விஜயா நடித்த

பொட்டு அம்மன்
கா.நே 11.00,2.45,6.00 (பு.நே)

மனோகரா யாழ்.
இன்று மட்டும்
ஜெயம் ரவி, ரேணுகா மேனன், வடிவேல் மற்றும் பலர்
தாஸ்
கா.நேரம்: 10.30;2.30;6.30;9.30
09.09.2005 தொடக்கம்
சிம்பு, கோபிகா மற்றும் பலர் நடித்த
தொட்டிஜெயா

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்
அங்கத்துவத்தை உறுதிப்படுத்தல்

பழைய மாணவர்கள் தங்கள் அங்கத்துவத்தை உறுதிப்படுத்தும்படியும் மற்றும் கடந்த காலங்களில் (20.09. 2003 இற்கு முன்) பணம் கொடுத்து அங்கத்துவத்தை பெறாதவர்கள் உடனடியாக பொருளாளருடன் தொடர்பு கொள்ளவும்.

ஆண்டுப் பொதுக்கூட்டம் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

E.தேவநேசன்,
செயலாளர்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்.

M.ஸ்ரீதரன்,
பொருளாளர். (C1635)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை, பிறவுன்றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.